குழந்தைகள் பத்திரிகை
28-9-1975
60 காசு

கோகுலம்




argenta
PHILIPS

கோகுலம்

மலர் 4 • இதழ் 13

செப்டம்பர் 28, 1975

ராட்சஸ. புரட்டாசி 12

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் - பாரதியார்

புதிய சந்தா விகிதம்

இந்தியா

ஒரு வருடம்	ரூ. 15.00
ஆறு மாதம்	ரூ. 7.50

இதர வெளிநாடுகள்


ஒரு வருடம்	ரூ. 33.00
ஆறு மாதம்	ரூ. 16.50


நைலான் பூக்கள்

பூ என்றாலே பெண்களுக்குக் கொள்ளை ஆசை. மணமுள்ள பூக்கள் எல்லாக் காலங்களிலுமே கிடைக்காதல்லவா? உங்கள் மேஜை மீதுள்ள பூ ஜாடியில் வாடாத பூங்கொத்தை வைக்க வேண்டுமா? இதோ அதற்கான செய்முறை. மெல்லிய கம்பி கொஞ்சம். பசையோடு கூடிய பச்சை நிறப் பிளாஸ்டிக் நாடாவோ அல்லது வர்ண செல்லோ டேப்போ கொஞ்சம். வர்ண பிளாஸ்டிக் மணியைத் தலையிலே உடைய குண்டூசிகள் கடைகளில் கிடைக்கும். அம்மாதிரியான குண்டூசிகள் கொஞ்சம். பழைய நைலான் துணிகளோ — அப்பா அண்ணாவினால் நிராகரிக்கப்பட்ட நைலான் ஸ்டாக்கிங்குகள் இருந்தாலே கூடப் போதும். வேண்டிய பொருள்கள் இவ்வளவுதான். இனி வாடாத வர்ணப் பூக்களை உருவாக்கலாம்.

நைலான் துணியில் இரண்டரை அங்குல விட்டங் கொண்ட வட்டத் துண்டுகளாகக் கத்திரித்துக் கொள்ளுங்கள். (2) மெல்லிய (ஃபியூஸ் போடப் பயன்படும் தாமிரக் கம்பி கிடைக்குமானால் ரொம்ப நல்லது) கம்பியில் பூ விதழ் போல 'லூப்' வரும்படி வளைத்து மடித்து இரு முனைகளையும் சேர்த்து இரண்டொரு முறுக்கு முறுக்கிக் (1) கொள்ளவும். லூப்பிலிருந்து இணைந்து நிற்கும் கம்பியின் நீளம் ஆறு அங்குலம் இருக்கட்டும். கம்பியில் உள்ள லூப்பின் மீது நைலான் வட்டத் துண்டுகளைப் போர்த்தி துணியின் முனைகளை ஒன்று சேர்த்து ஒரு கம்பியினால் அதை இறுக்கச் சுற்றி விடுங்கள் (3) இன்னொரு கம்பியைப் பாதியாக மடித்து விடுங்கள். இது பூவின் ஓர் இதழ். இப்படி மூன்று நான்கு இதழ்களைத் தயாரித்தானதும் மணித் தலையுடைய குண்டூசிகளில் மூன்று நான்கை ஒன்றாகச் சேர்த்து அதைச் சுற்றி இதழ்களை வைத்து (4) எல்லாவற்றையும் மெல்லிய கம்பியினால் இறுக்கிச் சுற்றுங்கள். காம்பாக உள்ள இந்தக் கம்பியின் கீழே ஓர் இலையை வைத்து (இலையையும் இதழ் போலவே தயாரித்துக் கொள்ளவும்) பச்சை செல்லோ டேப் கொண்டு சுற்றுங்கள். (5) நடுவில் மகரந்தப் பையோடு கூடிய ஒரு மலர் தயார்! இப்படி மூன்று, நான்கு, ஆறு, பத்து மலர்களைத் தயாரித்து எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்தால் வாடாத பூங்கொத்து ரெடி! பூங்கொத்தில் வண்ண வண்ணப் பூக்கள் இருக்க வேண்டுமானால் அதற்கு ஏற்றவாறு நைலான் துணித் துண்டுகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

— கே. சாந்தா





அறநெறி

13. ஆண்டியும் தோண்டியும்

ஒரு கிராமத்திலே ஒரு பிள்ளையார் கோயில் இருந்தது. எல்லோரும் அந்தப் பிள்ளையாரைப் பயபக்தியுடன் வழி பட்டு வந்தார்கள்.

அந்த ஊருக்கு ஒரு பரதேசி வந்தான் வீடுகள்தோறும் போய் பிச்சை எடுத்து உண்டு வந்தான். ''ஏய்! உனக்கு என்ன கேடு? ஏதாவது நல்ல தொண்டு செய்யக் கூடாதா? ஒரு நற்கருமமும் செய்யாமல் உடம்பை ஒதி மரம் போல் வளர்க்கின்றனையே?'' என்று சிலர் அவனை ஏசினார்கள்.

அந்தப் பரதேசி சிந்தித்தான். பிள்ளையார் கோயிலுக்கு அருகில் ஒரு பூந்தோட்டம் வைத்து, பூவெடுத்து மாலை தொடுத்து விநாயகருக்குக் கொடுத்துத் தொண்டு செய்ய வேண்டும் என்று எண்ணினான்.

பூந்தோட்டம் அமைத்தான். நல்ல நல்ல பூச்செடிகளைக் கொணர்ந்து நட்டான். வேலி கட்டினான். செடிகளுக்குத் தண்ணீர் விடுவதற்கு ஒரு தோண்டி வேண்டியிருந்தது.

அந்த ஊரில் ஒரு குயவனிடம் போய் ''ஐயா! வேளாரே! நான் பரதேசி. பிள்ளையார் கோயிலுக்கு அருகில் ஒரு நந்தவனம் வைத்திருக்கிறேன். மலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து கணேசனை நினைந்து வழிபட வேண்டும். நீர் மண் குடம் தருக'' என்று வேண்டினான்.


அந்தக் குயவன் ஒரு கஞ்சன். இல்லை என்று சொல்லாமல், ''நாளை வா'' என்றான். பரதேசி மறுநாள் சென்று தோண்டியை வேண்டினான். குயவன் ''நாளை வா'' என்றான்.

இப்படி ''நாளை வா, நாளை வா'' என்று ஆண்டியைப் பத்து மாதங்கள் குயவன் அலைய வைத்தான். முடிவில் குயவன் மனம் இரங்கி ஒரு தோண்டியைத் தந்தான்.

பரதேசிக்குப் பரம சந்தோஷம். ஆற்றுக்குப் போய், குடத்தில் தண்ணீரை மொண்டு தலையில் வைத்துக் கொண்டான்.

தங்கள் ஊரில் கெங்கையம்மை திருவிழாவிலே பலர் கரகம் வைத்து ஆடிய படி வருவதை இளம் வயதில் பார்த்தது பரதேசியின் நினைவுக்கு வந்தது.

குடத்தைத் தலையில் வைத்துக் கொண்ட பரதேசி தானும் அதுபோல் ஆட நினைத்தான்.



"நல்ல குடம் நல்ல குடம்
எனக்கு வந்ததே
எல்லையிலா இன்பம் வந்து
இங்கு நின்றதே"


என்று ஒரு பாடலைப் பாடி நடனம் ஆடினான். உடனே தோண்டி கீழே விழுந்து உடைந்து விட்டது.

ஆற்றங்கரையில் ஒரு சித்தர் அமர்ந்திருந்தார். அவர் இந்தக் காட்சியைக் கண்டார்.

ஒவ்வொரு ஆன்மாவும் பரதேசி. பிரம்மதேவனாகிய குயவனாரை வேண்டிப் பத்து மாதம் கருவிலே இருந்து இந்த உடம்பாகிய தோண்டியைப் பெற்றது. பெற்ற உடம்பை நற்றவ வழியில் பயன்படுத்தாமல், சினிமா, டிராமா, சீட்டாட்டம் முதலிய கேளிக்கைகளில் வறிதே வாழ்நாளை வீழ் நாளாகக் கழித்து, முடிவில் இந்த உடம்பை விட்டு மாண்டு போகின்றது. இந்தக் கருத்து அமைய அச்சித்தர் அடியில் வரும் பாடலைப் பாடினார்.

நந்தவனத்திலோர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தானொரு தோண்டி-அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்
தாண்டி

சங்கர சங்கர சம்பு — சிவ
சங்கர சங்கர சங்கர சம்பு!



அன்னை ஜீஜாபாய்

ஜீஜாபாய் — என்றதுமே மாவீரன் சிவாஜியை பாரதத்துக்கு அளித்த தாய் என்றுதான் உங்களுக்குத் தெரியும். ஒப்பற்ற தாயான அந்த மாதரசி அரசியல் நிர்வாகத்திலே நிகரற்றவர் என்பதோ கடமை என்று வரும்போது பழம் நம்பிக்கைகள் எதுவானாலும் அதை ஒதுக்கி விட்டுச் செயலாற்றும் நெஞ்சுரங் கொண்டவர் என்பதோ, தன்மானம் காக்கத் தன் உயிரையே தரத் தயங்காதவர் என்பதோ பலருக்குத் தெரியாது. மகாராஷ்டிர சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க ஓர் ஒப்பற்ற வீரனை ஒரு மாதரசி உருவாக்கினாள் என்றால் அவள் எத்தகைய குண நலன்களைக் கொண்டவளாக இருக்க வேண்டும்? தன் தாயின் எண்ணங்களையும், குணங்களையும் கனவுகளையும் பிரதிபலிப்பவராகவே விளங்கினார் சத்ரபதி சிவாஜி.

தேவகிரியை ஆண்ட யாதவ மன்னர்களின் பரம்பரையிலே வந்தவர் லாகூஜி ஜாதவ ராவ் என்பவர். அகமதுநகரை அரசாண்ட நிஜாம் ஷாவின் அவையில் செல்வாக்குள்ள சர்தாராக விளங்கினார் ஜாதவ். இவருடைய செல்வ மகள் தான் ஜீஜாபாய். ஜீஜாவுக்குப் பதினொரு வயதில் திருமணமாயிற்று. கணவனாக வந்தவரும் நிஜாம் ஷாவின் அவையில் செல்வாக்கு உள்ளவர்தான். புனா, சுபா, ஆகிய ஊர்களையும் சிவநேரி சக்ன் ஆகிய கோட்டைகளையும் ஜாகிர்களாகப் பெற்று நிர்வாகம் நடத்தி வந்தார் மாலோஜி என்பவர். இவருடைய மைந்தன் ஷாஹாஜிதான் ஜீஜாவின் கரம் பற்றிய கணவன்.

ஜீஜா கணவனோடு சில காலம் இன்ப வாழ்வு வாழ்ந்தாள். ஆனால் அது ரொம்ப நாள் இல்லை. அவள் வாழ்க்கையில் துன்பங்கள்தான் முக்கியத்துவம் பெற இருந்தன. அவைகளைத் தாங்கும் மனோ வலிமையையும் ஆண்டவன் அந்தக் குழந்தை உள்ளத்துக்குக் கொடுத்திருந்தான். தக்காணத்து அரசியலிலே மருமகனும் மாமனாரும் எதிர் எதிர் முகாம்களிலே நின்று போரிட வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று. ஜீஜாவின் தந்தை ஜாதவ ராவ் டெல்லியை ஆளும் மொகலாயர்களிடம் பணி புரியப் போனார். ஆனால் ஜீஜாவின் கணவனான ஷாஹாஜியோ






நிஜாம் ஷாவிடம் நாணயமும் விசுவாசமும் மிக்கவராக விளங்கினார் ஷாஹாஜியைத் தமது அந்தரங்க ஆலோசகராகவும் பெரும்படைக்குத் தளபதியாகவும் ஆக்கிப் பதவி உயர்வு செய்தார் அகமது நகர் சுல்தான் நிஜாம்ஷா.

தக்காணத்துச் சுல்தான்களும், டெல்லி மொகலாயர்களும் பரம விரோதிகள். எதிர் எதிர் முகாம்களிலே தந்தையும் கணவனும் இருக்கும்போது ஜீஜா யாரை ஆதரிப்பது? தந்தையையா, கணவனையா? இங்குதான், பாரதப் பண்பு பளிச்சிட்டது. பெண்ணின் கடமை, தான் கணவனின் உடமை என்பதை மறவாமல் செயல் புரிவது தானே? தந்தைப் பாசத்தை உதறினாள். கணவனின் நிழலிலே ஒதுங்கினாள் ஜீஜாபாய்.

அகமது நகர் மீது பலதடவை மொகலாயர்கள் தாக்குதல் நடத்தினார்கள். படைத் தலைமை தாங்கி வந்தவரோ ஜீஜாவின் தந்தை ஜாதவராவ். நிஜாம் ஷாவின் படைகளை நடத்தியவரோ ஜீஜாவின் கணவர் ஷாஹாஜி. வெற்றியும் தோல்வியும் இரு பக்கமும் மாறி மாறி வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தன. ஒரு சமயம் மொகல் படைகளிடம் தோல்வி கண்டார் ஷாஹாஜி. போர்க்களத்திலிருந்து பின்வாங்கி ஓட வேண்டிய நிலை. ஜீஜாபாய் அப்போது கருவுற்றிருந்தாள். அந்த நிலையில் கணவனோடு இடம் பெயர்ந்து போக முடியாது. ஒரு தந்தையின் உள்ளத்தைப் பற்றி அறிந்திருந்த ஷாஹாஜி தம் மனைவியை விட்டு விட்டுத் தான் மட்டும் வெளியேறினார்; ஜாதவ ராவ் தன்னுடைய நேர் விரோதியானாலும் கூட தம் சொந்த மகளான ஜீஜா பாய்க்கு அவர் தீங்கிழைக்க மாட்டார் என்ற நம்பிக்கையில்.

அந்த நம்பிக்கை வீண் போகவில்லை. ஆனால் ஜாதவ ராவ் தம் இருப்பிடத்துக்கு வந்து தங்கும்படி மகளை அழைத்த போது ஜீஜா மறுத்து விட்டாள். சிவநேரிக் கோட்டையிலேயேதான் இருக்கப் போவதாகக் கூறிவிட்டாள். தாயாகப் போகும் ஜீஜா பாய் கணவனின் ஜாகீரான சிவநேரிக்கோட்டையை விட்டு நகரவில்லை. அவள் கண்முன்னே மகாராஷ்டிரர்களின் ஜன்ம பூமியை மொகலாயர்களின் படைகளும் தக்காணத்துச் சுல்தான்களின் படைகளும் அடுத்தடுத்துத் தாக்கிச் சின்னா பின்னப் படுத்தின. அன்னை பூமி அன்னியர்களின் காலடியில் அகப்பட்டு உருக்குலைந்து, தரம் குன்றிப் போவதைக் கண்டு கண்கலங்கினாள் ஜீஜா. சிவநேரிக் கோட்டையின் காவல் தெய்வமான பவானியை நெஞ்சுருக வேண்டிக்கொண்டாள்.

''ஹே, சிவே !* எனக்கு ஒரு வீர மகனைக் கொடு. அன்னை பூமியின் கண்ணீரைத் துடைக்கும் ஆண்மை மிக்கவனாக அவனை வளர்ப்பேன். அந்த உத்தம புத்திரனைக் கொண்டு மகாராஷ்டிரத்திலே மராத்தியர்களின் சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தி, மொகலாயர்களின்



கொடுமையிலிருந்து தாய்நாட்டை விடுவிக்கச் செய்வேன், இது சத்தியம்.''

தாயுள்ளத்தின் வேண்டுகோள் ஏற்கப்பட்டது. ஜீஜா பாய்க்கு ஆண் குழந்தையையே அன்னை பவானி அளித்தாள். அந்தத் தெய்வத்தின் நினைவாகவே ஜீஜாபாய் தம் மகனுக்கு சிவாஜி என்று பெயரிட்டாள்.

புகழ்பெற்ற செயல்களைப் புரிந்த பெரியோர்களுக்கெல்லாம் போற்றத் தகுந்த குண நலன்களைக் கொண்ட தாயார் இருந்திருப்பதைச் சரித்திரம் அடுத்தடுத்து நிரூபித்து வருகிறது. சிவாஜியின் புகழுக்கும் பெருமைக்கும் அவரது தாய் ஜீஜாபாயே காரணம். வீர சிவாஜியின் நற் பண்புகள் அன்னை ஜீஜாவின் அறிவுரைகளாலும் அன்பான பாதுகாப்பாலும் வளர்க்கப்பட்டவை. சிவாஜியின் இளம் உள்ளத்திலே சுதந்திர மகாராஷ்டிரத்தை உருவாக்கும் கனலை மட்டும் ஜீஜாபாய் ஊதி வளர்க்கவில்லை. சகிப்புத் தன்மை, நேர்மை, சாகஸம் ஆகிய குணங்களையுமே புகட்டிய புண்ணியவதி அவள். நாடாளும் ஆசையும் அதிகார வெறியுமே மட்டும் கொண்ட அரக்க மனம் படைத்தவனாகத் தம்மகனை உருவாக்கவில்லை அந்தத் தாய். உயர்ந்த லட்சியங்களைக் கொண்ட மாபெரும் மன்னனாக, ஏழை எளிய மக்களின் நல் வாழ்விலும் அக்கரை கொண்ட அன்புள்ளம் படைத்த மாமன்னனாக வேண்டும் என்றே கனவு கண்டாள் ஜீஜாபாய். அந்தக் கனவும் அதற்காகப் பட்ட துன்பங்களும் வீண் போகவில்லை.

அன்பு மகனை, விடுதலை வீரனாக அன்னை உருவாக்கி வரும் இதே வேளையில் கணவன் பீஜப்பூர் சுல்தான் அலி ஆதில்ஷாவின் பிரதம மந்திரியானார். அன்னை பாரதத்தின் அடிமைத் தளைகளை அகற்றி விடுதலை பெறும் விழிப்பு உணர்வு தம் மகனிடம் பெருநெருப்பாகப் பெருகி வருவதைக் கண்டார் ஷாஹாஜி. இப்படிப்பட்ட ஒரு மகனை அருகில் வைத்துக் கொண்டு சுல்தானின் அவையில் தம் கடமைகளைச் செய்ய முடியாது என்பதை உணர்ந்தார். ஆகவே சிவாஜியைப் புனாவுக்கு அனுப்பி விட்டார், அன்னையிடமே அவன் வளரட்டும் என்று. இந்த ஏற்பாடு சிவாஜியை வெறும் வீரராக மட்டும் அல்லாமல் சிறந்த அரசியல் நிர்வாகத் திறமை மிக்கவராகவும் ஆக்கியது. எப்படி? கணவனது ஜாகிரான புனாவை ஜீஜாபாய்தான் நிர்வகித்து வந்தாள். மகனுக்கு விடுதலை வேட்கையோடு நாட்டு நிர்வாகத் திறமையையும் புகட்டினாள்.

பிரதாப்கர் கோட்டையிலே சிவாஜி அஃப்ஸல்கானைச் சந்தித்துக் கொன்று வென்று வந்தாரே அதற்குத் திட்டம் வகுத்துக் கொடுத்தவள் அன்னை ஜீஜா பாய்தான். அஃப்ஸல்கானிடம் மகனை அனுப்பிவிட்டு; அரண்மனையிலே தன் அருமை மகன் பத்திரமாகத் திரும்பி வரவேண்டுமே என்று தவிக்கும் இதயத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டு அன்னை பவானியை வேண்டியபடி காத்துக் கிடந்தாள். மகனின் வெற்றிக் குரல் கேட்டதும் அந்த அன்னையின் உள்ளம் கொண்ட ஆனந்தம், அப்பப்பா! ஆஸ்தான கவி அஜுனன்தாஸ் என்பவரைக் கொண்டு தம் மகன் சிவாஜி அஃப்ஸல்கானை மாய்த்த சம்பவத்தை தரணியேற்றும் வீர காவியமாகப் பரணியாக பாடும்படி கேட்டுக் கொண்டார்.

ஒரு நாள் தாயோடு சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்தார் சிவாஜி. போர்க்களங்களிலே வெற்றி பெறும் மார்க்கத்தைப் போதித்த அன்னை விளையாட்டிலே வெற்றி அடையும் வழியை மகனுக்குச் சொல்லித் தரவில்லை போலும். சிவாஜி தோற்றுப் போனார். ''அம்மா! உன் வெற்றியின் பரிசாக என்ன வேணும் கேள், தருகிறேன்!'' என்றான் வீர மகன். தான் பாலூட்டி வளர்த்த மகன், பாரத நாட்டுக்கு விடுதலை தேடித் தரும் மகத்தான பணியிலே தன்னை அர்ப்பணித்துக் கொள்ளுவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கும் பிள்ளை, தனக்கே பரிசு தர விரும்புகிறான் என்பதை நினைத்தபோது ஜீஜாவின் இதழ்களிலே இளநகை மலர்ந்தது. நிமிர்ந்து பார்த்தாள். சாளரத்துக்கு வெளியே தூரத்தில் தெரிந்தது ஒரு கோட்டை. ஆனால் அது அப்போது மொகலாயர்களின் வசம் இருந்தது. புனாவிலிருந்து பதினாறுவது மைலில் தான் இருந்தது அந்தக் கோண்டனாக் கோட்டை, ''மகனே, எனக்குப் பரிசாக அதோ தெரிகிறதே, அந்தக் கோட்டையை மீட்டுத் தர முடியுமா?'' என்று கேட்டாள். விளையாட்டிலே பெற்ற வெற்றிக்காக ஒரு கோட்டையையே மீட்டுத் தரும்படி கேட்டாள் வீர மகனிடம். விளையாட்டாகவே அதை மீட்டுக் கொடுக்க எண்ணிய சிவாஜி அந்தப் பணியை நிறைவேற்றித் தரும் பொறுப்பைத் தம் தோழனும் வீரனுமான தானாஜியிடம் ஒப்படைத்தார். தானாஜி மறு நாள் தம் மகனுக்குத் திருமணம் செய்விக்க ஏற்பாடு செய்திருந்தார். மன்னனின் கட்டளையைவிட மகனின் திருமணம் பெரிதல்ல என்று அதைத் தள்ளி வைத்து விட்டுப் போர்க்களத்துக்குப் புறப்



எத்தனை ஏக்கங்கள் உள்ளத்திலே – அவை
மொத்தமாய் அத்தனின் காலடியில்
மெத்தத் துணிவுடன் வைத்து விட்டால் – இனி
இத்தரை மீதினில் துன்பமில்லை.

வண்ணப்படம்: திலீப் பானர்ஜி

பட்டார். அன்று மராட்டிய அன்னை ஜீஜாபாய் விரும்பியபடி கொண்டானாக் கோட்டை பரிசாகக் கிடைத்துவிட்டது. ஆனால் கோட்டையை மீட்ட வீரர் தம் மகனின் திருமணத்தை நடத்தத் திரும்பவில்லை. தானாஜியின் மரணம் கேட்ட ஜீஜாபாய் துடித்துப் போனாள். தம் மகனைப் போலவே தானாஜியிடம் பாசம் கொண்டிருந்தாள் ஜீஜா. தான் விளையாட்டாகக் கேட்கப் போய் அது தன் அன்புக்குப் பாத்திரமான இன்னொரு மகனின் உயிரைப் பணயமாகக் கொண்டுவிட்டதே என்பதில் அந்தத் தாய் உள்ளத்துக்குத் தாங்க முடியாத தவிப்புத்தான்.

சிவாஜி ஔரங்கசீப்பைச் சந்திக்க ஆக்ரா கிளம்பிய போது மராத்திய ராஜ்யமான புனாவின் நிர்வாகப் பொறுப்பைத் தம் அன்னையான ஜீஜாபாயிடம்தான் ஒப்படைத்துப் போனார். மகனே உலகமாக அந்த மாதரசி வாழ்ந்தாலும் கணவனையே தெய்வமாகக் கருதும் கற்பரசி. துரோத புத்தி கொண்டவர்களின் போதனையினால் தான் சேவகம் செய்யும் சுல்தானிடம் கணவன் சிறைப்பட்டிருக்கும்போது அவரை மீட்டு வரும்படி தன் மகனிடம் கூறினாள். தன் தாயிடம் பராமுகமாக இருக்கும் தந்தைக்கு உதவ விரும்பவில்லை சிவாஜி. அதை அறிந்த போது தன் அன்னை குமுறி எழுந்து பொங்கி வெடித்த காட்சியைக் கண்ட வீர சிவாஜி விதிர் விதிர்த்துப் போனார். பாரதப் பெண்கள் கணவனிடம் கொண்டுள்ள பக்தியைக் கண்கூடாகக் கண்டார். தக்காணத்துச் சுல்தானைப் பணிய வைக்க டெல்லி மொகலாயரின் உதவியை வலிய நாடிப் போகும் ராஜ தந்திரத்தையும் தம் மகனுக்குக் கற்றுக் கொடுத்தார் ஜீஜாபாய். எந்தப் பெண்களிடமும் மதிப்பும் மரியாதையும் காட்ட வேண்டும் என்று தம் மகனுக்குப் போதித்தார் ஜீஜா. அன்னையின் கட்டளையை அப்படியே நிறைவேற்றத் தம் வீரர்களுக்கு ஆணையிட்டார் சிவாஜி. பெண்களை அவர்கள் எம் மதத்தவரானாலும் தாயாகப் பாவித்து மரியாதை செலுத்த வேண்டும் என்று. இதைக் கடைசி வரை கண்டிப்பாக அமல்படுத்தினார். பிற மதத்தவர்களின் கொள்கைகளை வெறுக்காமல் ஏற்றுக் கொள்ளும் நல்ல பண்பையும் அன்னை ஜீஜாபாயிடமிருந்தேதான் சிவாஜி கற்றுக் கொண்டார். ஓர் இந்து மதம் மாறினால் மறுபடி அவனை இந்துவாக ஏற்றுக் கொள்ளுவதில்லை அந்தக் காலத்தில். இதை மாற்றி அமைத்தார் ஜீஜாபாய். பஜாஜி நிம்பல்கர் என்ற மராட்டியர் மதம் மாறினார். பிறகு தன் தவறு உணர்ந்து இந்து மதத்துக்கே வர விரும்பினார். அவரை முழு மனத்தோடு இந்துவாக மதம் மாற்றி ஏற்றுக் கொண்டார், ஜீஜா. அது மட்டுமல்ல. ஒரு தடவை மதம் மாறியதினால் அவர் எவ்விதத்திலும் மற்ற இந்துவைவிடக் குறைந்தவர் அல்ல என்பதைப் பிறருக்கு உணர்த்தத் தம் பேத்தி – சிவாஜியின் மகள்– சக்குபாயை நிம்பல்கருக்கு மணம் முடித்து வைத்தார்.

லட்சியப் பெண்ணாகவும், ஒப்பற்ற தாயாகவும், சிறந்த ராஜ தந்திரியாகவும் நிர்வாகியாகவும் விளங்கிய அன்னை ஜீஜாபாய் தமது எண்பதாவது வயதில் ராய்கர் கோட்டையின் அடிவாரத்தில் உள்ள பச்சாத் என்ற கிராமத்தில் அமைதியாக இறைவனடி சேர்ந்தார். அவர் கண்ட கனவுகள் நினைவாவதைப் பார்த்துவிட்டுத்தான் கண் மூடினார். மகாராஷ்டிர ராஜ்யத்தின் மன்னராகத் தம் மகன் சிவாஜி முடிசூட்டிக் கொண்ட வைபவத்தையும் பெருகி வரும் மராட்டியர்களின் பலத்தின் வளர்ச்சியையும் கண்ட பிறகே ஜீஜாபாயின் ஆன்மா அமைதி கொண்டது.

சந்தால்

தெருக்கோடியில் வரும்போதே வீட்டிலிருந்து ஒரே சத்தம் கேட்டது. கடைக்குட்டி ஜெயந்தி தாத்தா வீட்டிலிருந்து அப்போதுதான் வந்திருந்தாள். தாத்தா இருப்பது ஒரு 'சிறிய ஊர். அவரிடம் மாடு கன்றுகள் நிறைய இருக்கின்றன. தாத்தா வீட்டில் ஒரு பசு மாடு கன்றுக்குட்டி போட்டதையும், 'அதனுடைய வால் பட்டுப் போல வழ வழவென்று இருக்கு' என்றும் ஜெயந்தி அளந்து கொண்டிருந்தாள்.

'இன்னும் இந்தப் பாழாய்ப்போன பரீட்சை முடியலையே. இல்லாவிட்டால் லீவில் தாத்தா வீட்டுக்குப் போய்க் கன்றுக்குட்டியின் வாலை முறுக்கலாமே?' என்று கண்ணன் வருத்தம் தெரிவித்துக் கொண்டிருந்தான்.

''தாத்தா வீட்டில் என்னடா, சந்தால் பழங்குடி மக்கள் மாடுகளை என்னமா வளர்க்கிறாங்க தெரியுமா ?'' என்று குரல் கொடுத்தேன். உடனே குழந்தைகளின் பார்வை என் பக்கம் திரும்பியது. எல்லோரும் சந்தாலைப் பற்றி விவரமாகச் சொல்லும்படி சக்தினார்கள். குழந்தைகளிடம் வகையாக மாட்டிக் கொண்ட நான் சொல்ல ஆரம்பித்தேன்.

''வங்காளம், பீகார் ஆகிய ராஜ்யங்களில் சந்தால் இனத்தவர்கள் வசிக்கிறார்கள். இவர்கள் சஹோரி என்று ஒரு பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். பண்டிகை தினம் எல்லா மக்களும் ஒரு பொது இடத்தில் கூடுகிறார்கள். பண்டிகைக்கு முதல் நாளிலிருந்து பட்டினியுடன் தூங்காமல் பூசாரி காத்துக் கொண்டிருக்கிறார்.

''பிறகு எல்லோரும் ஆற்றிலோ அல்லது குளத்திலோ குளித்து விட்டு வருகிறார்கள். அங்கு ஓர் இடம் சாணத்தினால் மெழுகி, அரிசி மாவினாலும் குங்குமத்தாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அதன் மீது அரிசி தூவப்படுகிறது. அலங்கரிக்கப்பட்ட இடத்தில் கோழி முட்டையை வைக்கிறார்கள். பிறகு ஒரு கோழியை இழுத்து வந்து, குளிப்பாட்டி விட்டுப் பலி கொடுக்கிறார்கள்.''

''ஐயோ பாவம்!'' என்றாள் ஜயந்தி.

''உடனே அங்கு ஒரு பசுமாட்டை அழைத்து வருகிறார்கள். பசுவின் கால்கள் கழுவப்படுகின்றன. கொம்புகளில் எண்ணெய் தடவப்படுகிறது. பசுவின் உடலில் குங்குமம் பூசுகிறார்கள். அடுத்தபடியாகக் கிராமத்து இடையனுக்கு மரியாதை செய்து யாவரும் வணங்குகிறார்கள். உடனே ஆட்டமும் பாட்டமும் நடக்கின்றன. முடிவில் எல்லாருக்கும் வெல்லம் தரப்படுகிறது.''

''இதெல்லாம் பார்க்கும்போது நம்ம மாட்டுப் பொங்கல் மாதிரியில்லே?'' என்றான் கண்ணன்.

''ஆனால் ஒரு வித்தியாசம். சந்தால் இனத்தவர்கள் பசுமாட்டுடன் தவிர, அதை மேய்ப்பவரையும் சேர்த்துக் கௌரவித்து வணங்குகிறார்கள்.''

''சந்தாலைப் பற்றி இன்னும் சொல்லுங்கள்'' என்று கண்ணன் கெஞ்சினான்.





மக்கள்

டாக்டர் எஸ்.எஸ்.சசி

''சாதாரணமாகச் சந்தால் மக்கள் காடுகளில்தான் வசிக்கிறார்கள். விவசாயமும், மாடு மேய்ப்பதும்தான் இவர்களின் தொழில். இவர்கள் வசிக்கும் இடங்களில் அதிகமாகப் போனால் முப்பதிலிருந்து நாற்பது வீடுகளுக்கு மேல் இருக்காது'' என்றேன்.

''சந்தால் மக்கள் பார்ப்பதற்கு எப்படி இருப்பாங்க?'' என்றாள் கீதா.

''பொதுவாக இவர்களின் நிறம் கறுப்பு. முழங்கால்வரை வேஷ்டி கட்டிக்கொள்கிறார்கள். பெண்கள் உடலின் எல்லாப் பாகங்களையும் மறைக்கும் வகையில் புடவை கட்டிக் கொள்கிறார்கள். இவர்கள் வசிக்கும் இடங்களில் வெப்பம் அதிகமாக இருப்பதால் பல சந்தால் குழந்தைகள் உடை இல்லாமலே திரிகின்றன.''

நான் தொடர்ந்தேன். ''சந்தாலில் பன்னிரண்டு பிரிவினர் உள்ளனர். இவர்கள் சீக்கிரம் கல்யாணம் செய்து கொள்வதில்லை. சாதாரணமாக ஆண்களுக்கு 25 வயதுக்கு மேலும், பெண்களுக்கு 20 வயதுக்கு மேலும்தான் கல்யாணம் நடக்கிறது. ஹிந்துக்களைப் போலவே இவர்களின் கல்யாணமும் நடக்கிறது. இவர்கள் பர்கா என்ற தெய்வத்தை வணங்குவதுடன், ஹனுமானையும் மகாதேவனையும் பூஜிக்கின்றனர். தவிர மந்திரவாதிகளும் உண்டு.

''அப்புறம்?'' என்றான் கண்ணன்.

''அப்பா, சந்தால் குழந்தைகளைப் பற்றிச் சொல்லுங்களேன்!'' என்றாள் ஜெயந்தி.

''சந்தால் மக்கள் குழந்தைகள் மீது உயிரையே வைத்திருக்கிறார்கள். வயலுக்கோ அல்லது தொலைவான இடங்களுக்கோ போகும்போது குழந்தைகளையும் அழைத்துக் கொண்டே போகிறார்கள். குழந்தைக்கு ஏதாவது வியாதி வந்து விட்டால் உடனே ஓஜா என்ற சூனியவைத்தியரிடம் ஓடுவார்கள். இந்த வைத்தியர் மந்திரத்தால் வைத்தியம் செய்வார். வியாதிகளுக்குக் காரணம் சைத்தான் என்றும், அதை மந்திரத்தாலேயே விரட்ட முடியும் என்றும் சந்தால் மக்கள் நம்புகிறார்கள்.

கண்ணனுக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. எழுந்தவாறே ''சந்தால் மக்கள் என்ன சாப்பிடுகிறார்கள்?'' என்று கேட்டான்.

''இவர்கள் புழுங்கல் அரிசி, கிழங்குகள், பழங்கள் போன்றவற்றை உண்கின்றனர். பெரும்பாலும் மாமிசம் சாப்பிடுவதில்லை. இருந்தாலும் மிருகங்களை வேட்டையாடுவதில் இவர்களுக்கு விருப்பம் அதிகம்''

''கண்ணனுக்குச் சாப்பிடுவதில் விருப்பம் அதிகம்'' என்று கீதா முற்றுப் புள்ளி வைத்தாள்.

தமிழாக்கம்: வி. கோவிந்தசாமி



மாய மோதிரம்

வாண்டுமாமா

குண்டோதரனின் கூச்சலையும் குள்ளர்களை அவன் ஆணையிட்டு ஆர்ப்பரித்ததையும் தங்கள் மறைவிடத்திலிருந்தபடி பார்த்துக் கொண்டிருந்தார்கள் பராக்கிரமரும் சத்ருக்னனும். தவத்தினால் கைவரக்கூடிய உருமாறும் சித்து விளையாட்டைக் குண்டோதரன் செய்து காட்டியது அவர்களுக்கு வியப்பையும் திகைப்பையும் உண்டாக்கியது. உருவமே இல்லாமல் அருபமாக ஆனால் உயிரோடு உலாவும் திறமை ஒப்பற்ற தவவலிமை கொண்ட சித்த புருஷர்களுக்குத்தான் சாத்தியம். ஆனால் இந்தக் குள்ளனுக்கு அது கைவருமானால்? அது அந்தத் தங்க நதியின் மந்திர குணங் கொண்ட சொக்கத் தங்கத்தினால் தயாரிக்கப்பட்ட மோதிரத்தின் மகிமையினால்தான் என்பதைப் புரிந்துகொள்ளப் பராக்கிரமருக்கு அதிக நேரமாகவில்லை.

குண்டோதரனின் கோரமான சிரிப்பு இன்னும் கேட்டுக் கொண்டுதான் இருந்தது. அவன் நின்றிருந்த பாறையிலிருந்து, சாம்பிராணித் தூபத்திலிருந்து வெளிப்படுவது போலப் புகை கிளம்பிச் சுழன்று சுழன்று மேல் நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. அது மட்டுமல்ல. அந்தப் புகை விநாடிக்கு விநாடி விதம் விதமாக நிறம் மாறிக் கொண்டுமிருந்தது. வெண் புகையாகச் சுருண்டெழும். அடுத்த நிமிஷம் செங்குருதி போன்ற சிவப்புப் புகையாக மாறும். கொஞ்ச நேரத்தில் அது பச்சை, மஞ்சள், கருப்பு, ஊதா என்று பல வர்ணங்களோடு நர்த்தனமாடியபடி மேலும் மேலும் பொங்கிக்கொண்டேயிருக்கும். அத்தனை புகையும் அந்தரத்திலே மிதந்தபடி இருந்த தகதகக்கும் தங்கக் கிரீடத்தினுள்ளே சென்று மறைந்தன. சொக்கத் தங்கத்திலே குண்டோதரன் தயாரித்து அணிந்து கொண்டிருந்த கிரீடம் அது.

குண்டோதரனின் கோரச் சிரிப்பு சட்டென்று நின்றது. பொங்கும் வண்ணப் புகைகளும் துடைத்து விட்டாற்போல் மறைந்தன. அந்த இடத்திலே மறுபடி குண்டோதரன் தங்கக் கிரீடமணிந்தவனாகத் தோன்றி நின்று கொண்டிருந்தான். தன்னைக் கண்டு, தன் மாய சக்திகளைக் கண்டு பீதியடைந்து சிதறியோடும் குட்டிச்சாத்தான்களான குள்ளர்களைக் கண்டு அட்டகாசமாகச் சிரிக்கலானான் குண்டோதரன். ''நினைவிருக்கட்டும். நான் சொன்னபடி நடக்க வேண்டும். என் ஆணைக்குக் கீழ்ப்படிய வேண்டும்!'' என்று கொக்கரித்தான் அவன்.

பராக்கிரமர் இன்னமும் மறைந்து கொண்டிருக்க விரும்பவில்லை. இந்தக் குண்டோதரனிடமிருந்து எப்படியும் அந்த மாய மோதிரத்தைப் பறித்துவிட வேண்டும் என்ற முடிவோடு தம்பி சத்ருக்னனுக்கு மௌனமாகச் சமிக்ஞை செய்துவிட்டுப் பளிங்குத் தூண் மறைவிலிருந்து வெளிப்பட்டார். அவர்களைக் கண்ட குண்டோதரனின் அட்டகாசச் சிரிப்பும் கொக்கரிப்பும் நின்றன. ஒரு விநாடி மௌனமாக அவ்விருவரையும் உற்றுப் பார்த்தான். மந்திரத் தங்கத்தின் மகிமையினால் அவ்விருவரும் யார், எதற்காக அங்கு வந்திருக்கிறார்கள் என்பது அவனுக்குத் தெரிந்து விட்டது. எதையும் அறிவிக்கும் ஆற்றல் அந்த மோதிரத்துக்கு உண்டு போலும். அதே மாதிரி எல்லாவற்றையும் அழிக்கும் ஒரு சாபமும் அதற்கு உண்டு.

''நீங்கள் யார், எதற்காக வந்திருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். பூலோகத்திலே வல்லமை பெற்றவராக

4



இருக்கலாம் பராக்கிரமர். பல போர் களங்களைக் கண்டவராக இருக்கலாம் அவருடைய தம்பியான சத்ருக்னர். ஆனால் குட்டிச்சாத்தான்களின் குகையிலே நீங்கள் இருவரும் செயலற்றவர்கள், தெரிந்ததா?'' என்றான் குண்டோதரன்.

பராக்கிரமர் புன்னகை பூத்தார். ''குண்டோதரா! யாராலுமே காண முடியாத உங்கள் இருப்பிடத்தை அறிந்து வந்திருக்கும் எங்கள் ஆற்றலை நீ குறைத்து மதிப்பிட்டு விட்டாய். எங்கள் திறமையையும் தகுதியையும் நீ முழுமையாக அறியவில்லை. அதனால் தான் இப்படிப் பேசுகிறாய்'' என்றார்.

''ஆண்டவனின் அருள் பெற்றவர்களாகவே இருக்கலாம் நீங்கள். அரசர்களையெல்லாம் அடிமை கொண்டு ஆட்சி நடத்தும் சக்கரவர்த்தியாக இருக்கலாம். ஆனால் இந்தக் குள்ளனை, குண்டோதரனை, அவனது தோற்றத்தைக் கண்டு மட்டும் மதிப்பிட்டீர்களானால் உங்களை திறமைசாலிகள் என்று என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. இதோ இந்தக் குண்டோதரனை, இங்கு பாறை இடுக்குகளிலும், தூண் மறைவிலும் ஒண்டிக் கொண்டு நடுங்கும் மற்ற குள்ளர்களைப் போல எண்ணி விடவேண்டாம். மந்திரக் கிரீடமும் மோதிரமும் அணிந்துள்ள மாயாஜாலக் குள்ளன் இந்தக் குண்டோதரன். என்னால் நினைத்த உருவத்தை எடுத்துக் கொள்ள முடியும். இதோ பாருங்கள்!'' என்று அவன் வாய் மூடுமுன் குபீர் என்று தீ ஜ்வாலை எரிமலையாகக் கக்கியது. உலைக் களத்தில் ஊதுகுழலால் கனன்று கொப்பளிக்கும் நெருப்பாக அந்தப் பிராந்தியம் முழுதும் செவேலென்று கனன்றது. வெப்பம் தகித்தது. அத்தனை தீக்கும் காரணம் என்ன என்பதைக் காண முடியாமல் கண்களைக் குருடாக்கியது வெளிச்சமும் வெப்பத்தின் உக்கிரமும். பராக்கிரமரும் சத்ருக்னனும் தங்கள் புறங்கையால் கண்களை மறைத்துக் கொண்டு இரண்டடி பின்வாங்கினார்கள். பார்வைக்குப் பாதுகாப்பாகக் கைகளை வைத்துக் கொண்டு குண்டோதரன் நின்றிருந்த இடத்தைப் பார்த்தார்கள்.

'புஸ் புஸ்' என்று சுழல் விட்டு வீசிய தீ ஜ்வாலை எங்கிருந்து வருகிறது என்பதை உற்று நோக்கினார்கள். அந்த உண்மையை உணர்ந்தபோது அவ்விரு வீரர்களின் உடலும் அத்தனை வெப்பத்திலும் சில்லிட்டுப் போயிற்று. பிரும்மாண்டமான ஒரு பாம்பு. எத்தனை நீளம்? எவ்வளவு பருமன்? அந்த மலைப் பகுதி முழுவதும் வியாபித்துக் கொண்டிருந்தது. வெறும் பாம்பா அது? இல்லை அதற்கு இறக்கையும் இருந்தது. விநோதமான அமைப்பு. அதன் முதுகிலே முதலைக்கு இருப்பது போல் ஈட்டியின் கூர்மையோடும், வாளின் வலிமையோடும் கூடிய செதில்கள். அந்தப் பயங்கரமான ஜந்து தனது அகன்ற வாயைத் திறந்து கொண்டு பராக்கிரமர், சத்ருக்னன் இவர்களின் தலைக்கு மேலே படமெடுத்த நிலையில் உயர்ந்து நின்றது. அதன் வாயிலிருந்துதான் உலைக் களத்துத் துருத்தியி லிருந்து வெளிப்படும் நெருப்பைப் போல் தீ வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

கொடிய பாம்பு உருக் கொண்ட அந்த நிலையிலும் குண்டோதரன் 'கெக் கெக்' என்று சிரித்துக் கொண்டிருந்தான். அதாவது சிரிப்பு ஒலி மட்டும் கேட்டது. அவன் சிரிப்பு பாம்பின் வாயிலிருந்து பெரு நெருப்பாக 'குப் குப்' என்று வெளிப்பட்டுக்கொண்டிருந்தது.



"இப்போதாவது இந்தக் குண்டோதரனின் வல்லமையை ஒப்புக்கொள்ளுகிறீர்களா?" என்று கேட்டான் மறுபடி குள்ள வடிவுக்கு மாறிய அவன்.

"குண்டோதரா! உன் திறமையையோ, பலத்தையோ நான் குறைவாகவே மதிப்பிடவில்லை" என்றார் பராக்கிரமர், போலியான பாராட்டுடன். "ஆனால் இம்மாதிரியான சாகஸங்கள் புரிவோர் எல்லாருமே எதைச் செய்வார்களோ அதையேதானே நீயும் செய்து காட்டுகிறாய் என்றுதான் எனக்கு வருத்தம்."

"எல்லோரும் செய்யக்கூடிய சாதாரணக் காரியத்தையா நான் இப்போது செய்தேன்?" என்று கூறிக் கடகட-வென்று சிரித்தான் குள்ளன்.

இம்மாதிரி மந்திர சக்தி பெற்றவர்களெல்லாமே சிங்கம், புலி, யானை, நெடிதுயர்ந்த மலை இப்படிப் பெரிய பெரிய உருவங்களாகத்தான் உரு மாறுகிறார்களே தவிர, தங்கள் நிஜ உருவைவிடச் சிறிய வடிவில் யாருமே மாறுவதில்லை. ஏன்? பெரிய உருவங்களில்தான் அவர்களுக்கு ஒரு மயக்கம். தங்கள் உருவில் ஒரு தாழ்வு மனப்பான்மை. அதனால்தான் சிறிய ஜந்துக்களாக மாறுவதை விரும்புவதில்லை."


"ப்பூ! இதுதானே? என்னால் எந்த உருவமும் எடுக்க முடியும். சந்தேகமிருக்குமானால் நீங்கள் ஏதாவது குறிப்பிட்டுக் கூறுங்கள். அதே மாதிரி உரு மாறிக் காட்டுகிறேன்."

"உன்னால் ஒரு தேரையாக — சிறு தவளையாக உருமாற முடியுமா?" சவால் விட்டார் பராக்கிரமர்.

"இதோ பார்த்துக் கொள்ளுங்கள்!" என்ற குண்டோதரன் நின்றிருந்த இடத்தில், அந்தப் பாறையின் மீது ஒரு சின்னத் தேரை தன் கொட்டைக் கண்களை விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தது. குண்டோதரன் தலையிலிருந்த தங்கக் கிரீடமும் மோதிரமும் சற்றுத் தள்ளி அதன் அருகில் இருந்தன.

பராக்கிரமரின் பேச்சிலிருந்தே அவர் எண்ணத்தைப் புரிந்து கொண்டு விட்டான் சத்ருக்னன். சாதுரியத்தினால் அவனை வெற்றி கொள்ள அண்ணா நிச்சயித்துவிட்டதை உணர்ந்த அவன் குண்டோதரன் சின்னஞ் சிறிய தவளையாக மாறியதும் பரபரப்புடன் "அண்ணா, சீக்கிரம் அந்தத் தவளையை உங்கள்கால்களால் அமுக்கிக் கொள்ளுங்கள்" என்று கிசுகிசுத்தான். "அந்த மந்திர கிரீடத்துக்குக் கீழே அது தாவிப் போகு முன், அப்படிப் போக முடியாமல் அதை அழுத்திக் கொள்ளுங்கள்" என்றான். திட்டமிட்ட பராக்கிரமருக்கு அது தெரியாதா? சட்டென்று அவரது உறுதியான பாதங்கள் தேரையை அழுத்திக் கொண்டன. பராக்கிரமரின் பாதம் பட்டவுடனேயே தேரை உரு மாறி, குண்டோதரனாகி விட்டான் குள்ளன். ஆனால் பலம் பொருந்திய பராக்கிரமரின் உறுதியான கால்களின் அழுத்தத்திலிருந்து அவனால் விடுபட முடியவில்லை. ஆணவம் அடங்கிப்போன நிலையிலே அவன் அலமந்து போய்விட்டான். இப்போது பராக்கிரமரின் சிரிப்பு அந்த மலைக் குகை எங்கும் கம்பீரமாக எதிரொலித்துக் கொண்டிருந்தது. ஒண்டி ஒடுங்கி ஒளிந்து கொண்டிருந்த குள்ளர்களெல்லாம் மெள்ளத் தலை நீட்டிப் பார்த்தார்கள். குண்டோதரன் பராக்கிரமரின் காலடியிலே திணறிக் கொண்டிருப்பதைக் கண்டு அவர்கள் முகங்களில் பீதி விலகி நிம்மதி படரலாயிற்று.

மந்திரக் கிரீடமும் மோதிரமும் அவன் கைக்கு எட்டாத தூரத்தில்



இருந்ததனால் அதன் மாய சக்திகள் அவனுக்குப் பயன்படவில்லை. சற்று முன்பு அவன் குரலில் தோன்றிய அதிகாரமும் ஆணையிடும் அகங்காரமும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயின.

''என்னைக் கொல்லாதீர்கள். எனக்கு விடுதலை அளியுங்கள்'' என்று கெஞ்சினான் குண்டோதரன்.

''உன்னைக் கொல்லுவது எங்கள் நோக்கமல்ல. ஆனால் ஒரு நிபந்தனையின் பேரில் உனக்கு விடுதலை வழங்கப்படும். அந்த மந்திரக் கிரீடத்தையும் மோதிரத்தையும் நீ மறந்துவிட வேண்டும். அவை இரண்டும் இனி எங்கள் உடைமைகள். அதற்கு நீ சம்மதிப்பதானால் உனக்கு விடுதலை அளித்து விடுகிறோம்'' என்றார் பராக்கிரமர்.

அவருடைய நிபந்தனையை ஏற்பதைத் தவிர வேறு வழியே இல்லை அவனுக்கு. அவரது பாதங்களின் அழுந்தலில் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தவன் நிபந்தனையை ஏற்றுக் கொண்டு விடுதலை பெற்று எழுந்து நின்றான். தோல்வியும், அவமானமும் அவன் நெஞ்சை நெருப்பாகச் சுட்டன.

''இதற்கு நான் உங்களைப் பழிவாங்கியே தீருவேன்'' என்றான் உடல் துடிக்க. தங்க நதியின் தங்கத்தினாலான மகுடத்தையும் மோதிரத்தையும் தங்கள் உடைமையாக்கிக்கொண்ட சாம்ராஜ்யாதிபதிகளான சகோதரர்கள் ஏளனமாக நகைத்தார்கள்.

''இன்னொன்றையும் நினைவில் கொள்ளுங்கள். இந்தத் தங்கம் யாரிடம் இருக்கிறதோ அவர்கள் வாழ்வில் துன்பம்தான் தொடரும். வேதனைகள்தான் வளரும். இன்ப வாழ்க்கையை இழப்பார்கள். அப்படியொரு சாபம் அதற்கு உண்டு. அதை மறந்து விடாதீர்கள்'' என்று எச்சரித்தான். அவனது பயமுறுத்தலை அவர்கள் லட்சியமே செய்யவில்லை. அவனைத் திரும்பியும் பார்க்காமல் குகையை விட்டு வெளியேறும் வழியிலே முன்னேறினார்கள்.

எல்லாம் இழந்த குண்டோதரன் மற்ற குள்ளர்களின் ஏளனச் சிரிப்பையும் குத்தும் பார்வையையும் தாங்க முடியாமல் தலை குனிந்து ஒரு பாறைப் பிளவின் இருளில் புகுந்து மறைந்தான்.

(தொடரும்)



மலரும் பூவெனப் பிள்ளை வளர்ந்திடப் பலமான துணை—
இன்க்ரிமின்*

பட்டுப் போன்ற பாப்பாவின் வளர்ச்சியிலே—முதலிரண்டு ஆண்டுகள்...மொட்டு விரியும் நேரம்—சிட்டுப்போல் பறக்க சிறகு முளைக்கும் பருவம்—இந்த முக்கியமான பருவத்திலே உங்கள் கண்மணிக்குக் கட்டாயம் தேவை—இன்க்ரிமின். பின்னர் பாருங்களேன் அவன் வளர்ச்சியை ! பசித்துப் புசிப்பான்...உண்ணும் உணவெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக மாறும். நலம் தரும் வைட்டமின்களோடு, உங்கள் மகனின் வளர்ச்சிக்கு மிக மிக அத்தியாவசியமான அமினோ அமிலம், லைஸின் யாவும் நிறைந்தது இன்க்ரிமின்.




டிராப்ஸ்—2 மாதங்கள் முதல் 2 வயது வரையில்
ஸிரப்—14 வயது வரையில்

இன்க்ரிமின்* டானிக்

உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும்
உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!

டாக்டர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர்—Lederle ஸயனமிட் இந்தியா லிமிடெடின் ஒரு பிரிவு

* அமெரிக்கன் ஸயனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க்


10 ml.
Incremin
drops LYSINE-VITAMINS
TONIC APPETITE
STIMULANT

காடு சென்ற கண்ணன்

பட்டிக்காட்டுப் பள்ளியில்
படித்து வந்த கண்ணனும்
பாட்டி மடியில் அனுதினம்
படுத்துக் கதை கேட்டிடுவான்.

பாட்டி சொன்ன கதையுடன்
படித்துப் பார்த்த கதைகளும்
காட்டு மிருகம் பறவையைக்
காணும் ஆசையைத் தூண்டவே

ஒருவரிடமும் சொல்லாமல்
ஒருநாள் காட்டு வழியிலே
விரைவாய் நடந்து சென்றனே
சிறிதும் அச்சம் இன்றியே

சிங்கம் புலிகளைத் தேடுறன்
சிறுநரி மான்களைத் தேடுறன்
எங்கும் எதுவும் காணுமல்
ஏமாற்றத்துடன் அழுகின்றன்.

அப்போ தங்கே ஒரு முனிவர்
அருகில் வந்து கண்ணனிடம்
'' அப்பா ! நீஏன் அழுகின்றய் ?
அம்மா அப்பா எங்கே ? நீ

தனியாய்க் காட்டுக்கு வரலாமோ?
தாயின் பேச்சைக் கேட்காமல்
இனியும் இங்கே நிற்காதே
ஏன் வந்தாயதைச் சொல்''எனவே

'' யானை சிங்கம் புலி நரிகள்
இனிய கிளிகள் பருந்துகளை
மானை மயிலைக் கண்டிடவே
மயங்கி இங்கு நான் வந்தேன்'

''காட்டில் வாழும் உயிரினத்தைக்
கஷ்டமின்றிக் கண்டிடவே
கூட்டில் அடைத்துக் காப்பதனைக்
குழந்தை நீயும் அறியாயோ ?

விலங்குக் காட்சிச் சாலைக்கு
விடுமுறை நாளில் நீ சென்றல்
நலமாய்ப் பார்த்து வந்திடலாம்

மழை....!



பள்ளிக்கூடம் விட்டவுடன் வானம் இருண்டது!
பாதி தூரம் ஓடிவந்தோம் இடி இடித்தது!
துள்ளத் துள்ளி வீடுவந்தோம் தூறல் வந்தது!
துரத்திவந்த தூறல்பெரும் மழையைத் தந்தது!

காடுமேடு பள்ளமெல்லாம் வெள்ளம் உருண்டது!
காற்றடித்து மரங்களெல்லாம் ஒடிந்து விழுந்தது
மாடுஆடு மிருகமெல்லாம் மயங்கி நின்றது!
மாங்குயிலும் பாட்டிசைக்க மறந்து போனது!

தவளைஅக்கா பாட்டுப்பாடி ஓய்ந்து நின்றது!
தண்ணிபாம்பு சமயம்பார்த்து பிடித்துக்கொண்டது
கவலையின்றி மீன்களெல்லாம் துள்ளி ஓடுது!
காக்கை அண்ணு வெள்ளத்திலே குளித்து நின்றது

காகிதத்தில் கப்பல்செய்து வெள்ளத்தில் விட்டோம்!
கப்பல் மிதந்து வெள்ளத்தோடு கடலில் கலந்தது
பாகுபாடு இல்லாமலே மழையும் பெய்யுது!
பார்செழித்து நாடுவாழ வழியும் செய்யுது!

— பவானந்தி






எண்ணும் எழுத்தும்

ஒன்றென்று சொல் தெய்வம்
உண்டென்று சொல்
என்றென்றும் உண்மை வழி
இனங்கண்டு நில்


இரண்டென்று சொல் இனம்



தம்பிக் கண்ணன் மனம் மகிழ்ந்து
''தாத்தா! மிகமிக நன்றி'' என்றே,
தாவி நடந்தான் வீட்டுக்கு.

— திருமதி சுபா. மதனகோபால்





நல்ல தோட்டம்!


தோட்டம் போடப் போறேன் — நல்ல
தோட்டம் போடப் போறேன்!
வீட்டுச் செலவைக் குறைக்க நானே
தோட்டம் போடப் போறேன்! (தோட்டம்)

படித்த நேரம் போக — மாலை
பாடுபட்டுக் கொத்திப்
பிடித்த காய்கள், கீரை — வாழைப்
பயிர்கள் செய்யப் போறேன்! (தோட்டம்)

பச்சைக் காய்கள் பறித்த — வுடனே
பாங்காய்ச் சமையல் பண்ண;
கச்சை கட்டி வீரத்தோடு
கடமை தவறி டாமல் (தோட்டம்)

ஆடியோடித் திரிந்திடாது
கூடித் தம்பி யோடே
நாடி நரம்பு முறுக்கு ஏறி
நல்லா இருக்க உடனே (தோட்டம்)

— ஆர்ப்பாக்கம் கவிப்பித்தன்



இலை என்று சொல்

மூன்றென்று சொல் தமிழ்
மூன்றென்று சொல்
முத்தமிழ் என் உயிரின்
மூச்சென்று சொல்

நான்கென்று சொல் வேதம்
நான்கென்று சொல்
நல் வோர் இனங் கண்டு
நன்னெறியில் நில்

ஐந்தென்று சொல் காப்பியம்
ஐந்தென்று சொல்
அழகு தமிழ் அமுதுண்டு
அடங்கி நீ நில்

ஆறென்று சொல் சுவை
ஆறென்று சொல்
அருட்சுவை உண்டிறைவன்
அடிகண்டு நில்

ஏழென்று சொல் நாட்கள்
ஏழென்று சொல்
எதிர்கால மணித் துளியை
இறையாது வெல்

எட்டென்று சொல் திசைகள்
எட்டென்று சொல்
எத்திக்கும் பாரதத்தாய்
இசை கொண்டு செல்

ஒன்பதென்று சொல் மணி
ஒன்பதென்று சொல்
உழவாலும் தொழிலாலும்
உலகை நீ வெல்

பத்துண்டு விரல் ஆகுதல்
பகையில்லை சொல்
பாரத இனமொன்று
பாடி நீ நில்.

— தஞ்சை சிவம்

உயிர் காக்கும் பணி — ரத்ததானம்

லென்ஸ்

அந்தக் கண்காட்சியில் கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. கலாவும் ரவியும் அநேகமாக எல்லா ஸ்டால்களையும் பார்த்து முடித்திருந்தனர்.

''கலா....ரவி....!'' திடீரென்று பழக்கப்பட்ட குரல் ஒன்று அழைப்பதைக் கண்டு இருவரும் திரும்பினர்.

''உங்கள் இரத்தத்தின் பிரிவைத் தெரிந்து கொள்ளுங்கள்'' என்று போர்டு போட்டிருந்த ஒரு ஸ்டாலின் முன் புன்னகையுடன் நின்று கொண்டிருந்தாள் சித்ரா.

''சித்ராக்கா !'' என்று மகிழ்ச்சியுடன் கூறிக்கொண்டு இருவரும் அங்கு ஓடினர்.

''அக்கா! எதுக்கு எல்லார் விரலிலும் குண்டூசியால் குத்தி ரத்தம் எடுக்கிறீங்க?'' என்று குழந்தைத்தனமாகக் கேட்டாள் கலா.

''எல்லாருடைய ரத்தப் பிரிவையும் அவங்கவங்களுக்குத் தெரியப்படுத்தத் தான்'' என்றான் ரவி.

''அது எதற்கு என்று தெரியுமோ ரவி?'' என்றாள் சித்ரா.

''அது....'' என்று மழுப்பியவன், ''நீங்கள் சொன்னால்தானே தெரியும்'' என்று முடித்தான்.

''முதலில் ஸ்டாலுக்கு உள்ளே வந்து உட்காருங்கள்'' என்று உட்புறம் அவர்களை உட்கார வைத்தாள்.

கண்காட்சி முடியும் நேரம் நெருங்கி விட்டதாலும், லேசான மழைத் தூறல் இருந்ததாலும் கூட்டம் வெகுவாகக் குறைந்து விட்டது.

'' இரத்தத்தில் எத்தனை பிரிவுகள் இருக்கின்றன என்று தெரியுமா ரவி?'' என்று பேச்சை ஆரம்பித்தாள் சித்ரா.

''அவ்வளவாகத் தெரியாது'' என்று கூறிச் சித்ராவைப் பார்த்தான்.

''எல்லார் உடம்பிலேயும் ஓடும் இரத்தம் பொதுவானதாக இருந்தாலும் சில வேறுபாடுகள் அதில் உண்டு. நம் நாட்டைப் பொறுத்த அளவில் நான்கு விதமான ரத்தப் பிரிவுகள் இருக்கின்றன. '0', 'A', 'B', 'AB' என்பவைதான் இவை.

''இரத்தம் செலுத்துவது என்று கேள்விப்பட்டிருக்கிறாயா ரவி'' என்றாள் சித்ரா.

''ஓ! எங்க தாத்தாவுக்குக் கூட முந்தி ஒரு தரம் ஆபரேஷன் பண்ணும்போது இரத்தம் கொடுத்துத்தான் பண்ணினாங்க, அப்படீன்னு பாட்டி சொல்லியிருக்கா!''

''உதாரணமாக ஆபரேஷன் செய்யும்போதோ, இரத்த சோகைக்கு வைத்தியம் பண்ணும்போதோ, விபத்துக்களின் மூலம் இரத்தம் இழந்தவருக்கு இரத்தம் கொடுக்கவோதான் இந்த (Blood Transfusion) என்னும் இரத்தம் செலுத்தும் காரியத்தைச் செய்வார்கள்.

''கி. பி. 1616ல் ஹார்வி என்பவர் நம் உடலின் ரத்த ஓட்டத்தைக் கண்டு பிடித்தார். கி. பி. 1625ல் அட்ரிச் (Adrich) என்பவர் இரத்தம் செலுத்த வெள்ளிக் குழாய்களைப் பயன்படுத்தலாம் என்று கண்டுபிடித்தார். ஆனால் முதன் முதலில் நோயாளிக்கு இரத்தம் செலுத்தியவர் பிரான்ஸைச் சேர்ந்த டெனி (Deni) என்பவர். இது கி. பி. 1667ல் ஏற்பட்ட முன்னேற்றம். இதற்குப் பிறகு 19ம் நூற்றாண்டின் துவக்கக் கட்டத்தில் லண்டன் வைத்தியரான ஜேம்ஸ் பிளன்டெல் (James Blundel) என்பவர் இரத்தம் செலுத்துவதற்கு ரப்பர் குழாய்களைப் பயன்படுத்தினார். ஆனால் இவையெல்லாம் ரத்தப் பிரிவுகளைக் கண்டுபிடிக்கும் முன்னர் ஏற்பட்ட முன்னேற்றங்கள்தான்.''

''இரத்தம் செலுத்துவது பற்றி எதுவுமே சொல்லவில்லையே?'' என்றான் அவசரக் குடுக்கையான ரவி.

''அவசரப்படாதே! இரத்தம் செலுத்துவது அந்தந்த நோயாளியின் இரத்தப் பிரிவைத் தெரிந்து கொண்ட பின் பரிசோதனை செய்து, இந்தப் பிரிவு ரத்தம் இந்த நோயாளிக்குச் சேரும் என்று தீர்மானித்த பின்னர் செய்யப்படும் ஒரு காரியம். இரத்தம் பழங்காலத்தில் வாய் வழியாகக் கொடுக்கப்பட்டு வந்தது (எகிப்தில்). தற்போது மருத்துவத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்களின் விளைவாக, இரத்தம் சேமித்து வைக்கப்பட்டுள்ள பாட்டில்

லிருந்து உடலுக்குள் இரத்தக் குழாய் மூலம் செலுத்தப்படுகிறது. இரத்தம் செலுத்தும்போது அதனுடன் வேறு எந்த மருந்தும் கலக்கப்படக் கூடாது. பாட்டில் குலுக்கப்படவும் கூடாது. மேலும், செலுத்தப்படும் இரத்தம் வெப்பத்தால் பாதிக்கும்படி விட்டுவிடவும் கூடாது.

''நம் உடலில் 300 கன சென்டிமீட்டர் இரத்தம் எடுக்க 5லிருந்து 7 நிமிடங்கள் ஆனாலும் கூட, அதே இரத்தத்தை நோயாளிக்குக் கொடுக்க இரண்டு மணி நேரம் தேவை. ஒரு நிமிடத்தில் சுமார் 30 அல்லது 40 துளிகள் நோயாளிக்குச் செலுத்தப்படும்.''

''இத்தனை இரத்தம் அவர்களுக்கு எங்கே கிடைக்கும்?'' என்று குறுக்கிட்டான் ரவி.

''மிகவும் முக்கியமான கேள்வி. நம் உடலில் ஏற்படும் இரத்த சேதத்தை ரத்தத்தால்தான் ஈடு செய்ய முடியும். அதுவும் மனித இரத்தம்தான் இதற்குத் தேவை'' என்று கூறி நிறுத்தினாள் சித்ரா.

''ரொம்பவும் கஷ்டமான காரியம் தான். ஆனால் நல்லா இருக்கிறவங்க உடம்பிலேருந்து கொஞ்சம் கொஞ்சம் இரத்தம் எடுத்துக்கிட்டா எல்லாம் சரியாய்ப் போயிடுமே!'' என்று கூறினாள் கலா.

''ரொம்ப சரி! அதைத்தான் எல்லா மருத்துவ மனைகளிலும் செய்துகிட்டிருக்காங்க...''

'' அது எப்படின்னு சொல்லுங்களேன்'' என்று கேட்டான் ரவி.

''ரவி! பாங்க் பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாயோ?'' சித்ரா தொடர்ந்தாள்.

திடீரென்று சித்ரா பாங்கைப் பற்றிக் கேட்பதைக் கண்டு திகைத்தான் ரவி. ஏன், கலாவும் கூடத்தான்.

''ஓயெஸ்! எனக்குச் சேமிப்புக் கணக்குக்கூட இருக்கே'' — இது ரவி.

''எப்படி, பணம் சேமிக்க என்று பாங்க் இருக்கிறதோ அதே போல் இரத்தம் சேமிக்கவும் பாங்க் இருக்கிறது என்று உனக்குத் தெரியுமோ?'' இதற்கு (Blood Bank) என்று பேர்.

''பணம் மாதிரின்னு சொல்றீங்களே, எப்படி?'' — இது கலா.

''பணம் மாதிரின்னா உடலில் வலு இருப்பவர்கள் இரத்த சேமிப்பு நிலையத்துக்குச் சென்று இரத்த தானம் செய்யலாம். ஆனால் இதில் வட்டி கிடையாது. உயிர் காக்க விலை சொல்ல முடியுமா என்ன?''

''நிஜமாகவே இது சுவாரஸ்யமான விஷயந்தான். அக்கா'' என்று ஊக்கினான் ரவி.


''ஒவ்வொரு பெரிய மருத்துவ மனையிலும் இதுமாதிரி ரத்த வங்கி (Blood Bank) உள்ளது. இந்த இரத்த வங்கிக்கு வந்து இரத்தம் கொடுப்பவர்களை (Blood Donar) இரத்த தானம் செய்வோர் என்று சொல்கிறோம். பணம் பெற்றுக் கொண்டு இரத்தம் கொடுப்பவர்களும் உண்டு. இலவசமாக இரத்த தானம் செய்பவர்களும் உண்டு.''

''இரத்த தானம் செய்யணும்னா என்ன தகுதிகள் அவங்களுக்கு வேண்டும்?'' என்றாள் கலா.

''முதலில் அவர்களுக்குப் பதினெட்டு முதல் ஐம்பத்தைந்து வயதுக்குள் இருக்க வேண்டும். மஞ்சள்காமாலை (Jaundice) நோயால் பாதிக்கப்படாதவர்களாயும், மற்றும் இரத்தத்தின் மூலம் பரவக்கூடிய வியாதிகள் இல்லாதவர்களாகவும் இருக்க வேண்டும்.''

''இரத்தத்தை எப்படிச் சேமித்து வைப்பாங்க?'' என்றான் ரவி.

''சொல்றேன். உங்க வீட்டிலே 'ஃபிரிட்ஜ்' இருக்கில்லே, அதே மாதிரி, இரத்த சேமிப்பு நிலையத்திலே இருக்கிற 'ஃபிரிட்ஜ்'ஜுக்குப் பேரு ''வாக்-இன்-கூலர் (Walk-in-cooler) 0-4 டிகிரி சென்டிகிரேட் வெப்ப நிலையில் ரத்த பாட்டில்கள் பாதுகாக்கப்படும். அதாவது இரத்த தானம் செய்ய வருபவர்களிடமிருந்து இரத்தம் எடுக்கிறதுக்கு முன் அந்தப் பாட்டிலே இரத்தம் உறையாமல் இருக்க ஒருவித ரசாயனம் போட்டுச் சுத்தப்படுத்தி பிறகு இந்த வாக்-இன்-கூலரில் வைப்பார்கள்.



'' எத்தனை நாளைக்கு இது மாதிரி வைக்கலாம்?'' என்றாள் கலா.

''சாதாரணமாக இருபத்தோரு நாட்கள் இந்த இரத்தம் பாதுகாக்கப்படலாம். அதற்குப் பின்னர் இதிலுள்ள பிளாஸ்மா (Plasma)வை மட்டும் பிரித்தெடுத்து தீப் புண்ணால் பாதிக்கப்பட்டவர்

வீட்டில் செய்த விஷமம்

எனக்குத் தேன் என்றால் ஆசை. ஒரு நாள் அம்மா வீட்டில் இல்லாத போது சமையல் அறையில் இருந்த தேன் பாட்டிலை எடுத்து வாயில் கவிழ்த்துக் கொண்டேன். அம்மா வரும் சத்தம் கேட்டது. வந்தால் கோபிப்பாளே என்று கடகட என்று விழுங்கி விட்டேன். பிறகுதான் என் விஷமத்தின் பலன் தெரிந்தது. சுரீர் என்று எரிந்தது. "அம்மா! அம்மா!" என்று அலறினேன். அம்மா ஓடி வந்தாள். நான் சாப்பிட்டது டிங்ச்சர் (Tincture) என்று தெரிந்தது ஒரே அமர்க்களம். டாக்டர் வந்து மாற்று மருந்து கொடுத்தார். அன்றோடு என் விஷமத்தை விட்டு விட்டேன்.

— ஆர். சீனிவாசன்
வயது: பதினொன்று

xxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxx

களுக்கு செலுத்துகிறார்கள். சில இடங்களில் பிளாஸ்மாவை உறைய வைத்து Dry Plasma Powder என்று தயாரித்து அதை Distilled Weter ரில் கலந்து பின்னர் பயன்படுத்துகின்றனர்."

"அக்கா! எனக்கு ஒரு சந்தேகம் பாங்கிலே பணம் போட்டாத் திரும்பக் கிடைக்கும். ஆனா இதிலே...?"

"முதலில் நாம் இரத்தம் கொடுத்த இரண்டு நாட்களில் நம் உடலில் இரத்தம் ஊறிவிடுவதால் நமக்கு எந்த நஷ்டமும் கிடையாது. அது மட்டுமல்லாமல் இரத்த தானத்தின் மூலமாக ஓர் உயிரையும் காப்பாற்றுகிறோம். ஆனால், நீ சொல்கிற மாதிரி இரத்த தானம் செய்பவர்களுக்கு (Blood Bank) மூலம் ஒரு பயனும் இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் இவர்கள் (Donar Card) கொடுப்பதனால் அதில் அவருடைய இரத்தப் பிரிவு, பெயர், விலாசம், எத்தனை முறை இரத்த தானம் செய்துள்ளார் போன்ற விவரங்கள் எளிதில் தெரியும். அவருக்கோ, அவருடைய நெருங்கிய உறவினருக்கோ இரத்தம் கொடுக்கவேண்டிய சந்தர்ப்பம் எப்போதாவது ஏற்பட்டால் இந்த (Blood Bank)குகள் இரத்தம் கொடுக்கும். இது தவிர இவர்கள் வழக்கமாகவே அரசினர், மற்றும் தனியார் மருத்துவ மனைகளுக்கு இரத்த தானம் கொடுத்து வருகின்றனர்."

"எந்தெந்தப் பிரிவு இரத்தம் எப்படியெப்படிக் கொடுக்கப்படும்?" என்று கேட்டான் ரவி.

"பொதுவா '0' பிரிவு இரத்தம் எல்லாப் பிரிவுகளுக்கும் சேரக் கூடியது. அதே மாதிரி 'AB' பிரிவுக்கு வேறு எந்தப் பிரிவு இரத்தம் வேண்டுமானாலும் கொடுக்கலாம். இதனால்தான் '0' பிரிவு மக்களை Universal Donar என்றும் 'AB' பிரிவு மக்களை Universal Recipients என்றும் சொல்கிறோம்."

"பொதுவாக எத்தனை நாட்களுக்கு ஒருமுறை இரத்தம் தானம் கொடுக்கலாம்?"

"ஏன் கலா! இரத்தம் கொடுக்கத் தீர்மானம் பண்ணிட்டியா? ஆனால் நீ இன்னும் பத்து வருடம் கழித்துத்தான் கொடுக்க முடியும். நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருப்பவர்கள் மூன்று மாதத்துக்கு ஒரு முறை இரத்தம் கொடுக்கலாம். இரத்த தானம் கொடுக்கும் எண்ணம் இருப்பவர்கள், மருத்துவ மனையிலோ, அல்லது Voluntary Blood Bank கிலோ, பெயரைப் பதிவு செய்து கொண்டால் அவசரத் தேவை ஏற்படும் போது, அவர்களை வலிய அழைப்பார்கள். இதில் ஒரு விசேஷம் என்னவென்றால் இரத்தம் எடுத்த உடனே கொடுத்தால்தான் நோயாளி பலன் பெற முடியும்."

"எத்தனை முறை கொடுத்தால் ரிகார்ட்?" என்று ரவியிடமிருந்து வந்த கேள்வி சித்ராவை வியப்பில் ஆழ்த்தியது.

"அவ்வளவு ஆர்வமா உனக்கு? சென்னையைப் பொறுத்த அளவில் இருபது வருடங்களில் சுமார் எழுபத்தாறு தடவை இரத்தம் கொடுத்துள்ளார் ஒரு பாதிரியார். இவர் பெயர் ஃபாதர் உப்ஹாம். இப்போது இவருக்கு எழுபது வயதானதால் இவரிடமிருந்து இரத்தம் எடுப்பதில்லை."

"நம் நாட்டிலிருக்கும் மக்கள் தொகையைக் கணக்கிட்டோம்னா இரத்த தானம் செய்ய வருபவர்களின் தொகை மிகவும் குறைவு. அதுக்குத்தான் இரத்த தானத்தின் மேன்மையை எடுத்துச் சொல்ல ஒவ்வொரு அக்டோபர் மாதமும் முதல் தேதியை National Voluntary Blood Donation Day ன்னு கொண்டாடறாங்க. என்ன ரவி ஏதாவது சந்தேகமா?"

"இல்லே! எங்களோட இரத்தம் என்ன குரூப்னு சொல்லவில்லையே, அக்கா" என்றான் ரவி.

"நிச்சயமா! நம்மை மாதிரிக் குழந்தைகள்தான் வருங் காலத்தில் இரத்த சேமிப்பின் மேன்மையை உணரணும்' என்று கூறிக்கொண்டே அவர்கள் இருவரின் பிஞ்சு விரல்களிலிருந்தும் துளி இரத்தம் எடுத்துப் பரிசோதனையில் ஈடுபட்டாள் சித்ரா.



இன்ஸ்பெக்டர் மாமா!

பொழுது வேகமாக விடிந்து கொண்டிருந்தது.

''சார்....''

யாரோ அழைக்கும் குரல் கேட்டு குமார் வீட்டின் வெளியே வந்து எட்டிப் பார்த்தான்.

கையில் ஜேம்ஸ்பாண்ட் பெட்டியுடன் ஒருவர் வெளியே நின்றுகொண்டிருந்தார். முழுக் கால் சட்டையும் அரைக் கைச் சட்டையும் அணிந்து பட்டணத்து ஆசாமி போல் தோற்றம் அளித்தார் அவர்.

''தாமோதரன் இருக்கிறானா?'' என்று அந்த ஆள் குமாரைப் பார்த்துக் கேட்டார்.

குமாருக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவன் அப்பா தாமோதரன் அந்த ஊரில் பெரிய பணக்காரர். நாணயமுள்ளவர். மதிப்பு மிக்கவர். அவரை மரியாதைக் குறைவாகப் பேசும் துணிவு அது வரை யாருக்கும் வந்ததில்லை. அப்படிப்பட்டவரை யாரோ முன்பின் தெரியாத ஆள் ஒருவர் 'இருக்கிறானா ?'' என்று கேட்டால் திகைப்பாக இல்லாமல் குமாருக்கு வேறு எப்படி இருக்கும் ?


'' என்ன தம்பி அப்படிப் பார்க்கிறே ? என் பெயர் நல்லதம்பி. சேலத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டராக இருக்கிறேன். நானும் உன் அப்பாவும் ஒன்றாகப் படித்தவர்கள்'' என்றார் அந்தப் புதிய ஆள்.

குமாருக்கு இப்போது இலேசாகப் புரிந்தது. இளம் வயது நண்பர்கள் வயதான பின்னும் அர்த்தமற்ற மரியாதை வார்த்தைகளை உதிர்த்துவிட்டுத்தான் பேசிக் கொள்வார்கள் என்பது அவன் அறிந்ததுதான். எனினும், என்னவோ அவரை — அந்த நல்ல தம்பியை — அவனுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அதற்கான காரணமும் அவனுக்குப் புரியவில்லை.

''அப்பா ஊரில் இல்லையா, குமார்?'' என்று மீண்டும் கேட்டார் நல்ல தம்பி.

மீண்டும் திடுக்கிட்டான் குமார்.

ஜெயவண்ணன்



அவரே தொடர்ந்தார்: "நான் தான் இங்கு வந்தது இல்லேயே தவிர உன்னைப் பற்றியும் உன் தங்கை உமா வைப் பற்றியும் உன் அப்பா என்னிடம் நிறையக் கூறியிருக்கிறார்."

அதற்குள் குமாரின் அம்மா வெளியே வந்துவிட்டார். நல்ல தம்பி தன்னைப் பற்றிச் சுருக்கமாகக் கூறினார்.

"உங்களைப் பற்றி அவர் முன்பே சொல்லியிருக்கிறார். நீங்கள் இங்கு வருவதேயில்லே என்ற குறைதான் அவருக்கு. நேற்று ஒரு கேஸ் விஷயமாகக் கோயம்புத்தூருக்குப் போயிருக்கிறார். நாளை வந்து விடுவார். இவ்வளவு தொலேவு வந்து விட்டீர்கள். இருந்து பார்த்து விட்டுப் போங்களேன்......" என்ற குமாரின் அம்மா, "குமார், மாடியில் முதல் ரூமை காலி செய்து மாமா தங்குவதற்கு வேண்டிய உதவியைச் செய்" என்றாள்.

"சரி அம்மா..." என்றான் குமார் வேண்டாவெறுப்பாக.

நல்லதம்பி மாடிப் படியை நோக்கிக் கையில் பெட்டியுடன் நடந்தார்.

நல்லதம்பி வந்தது முதல் குமாரின் தங்கை உமா அவரையே சுற்றிச் சுற்றி வந்தாள். அவள் கை நிறையச் சாக்லெட். எல்லாம் அவர் வாங்கிக் கொடுத்ததுதான்.

"போலீஸ் மாமா ரொம்பவும் நல்லவர், இல்லே அண்ணா?" என்று வாயில் சாக்லெட்டை மென்று கொண்டே கேட்டாள் உமா.

"ஆமாம்... அவர்கிட்டே நீயே போய் கொஞ்சிண்டிரு...!" என்று எரிந்து விழுந்தான் குமார்.

அவரும் அவர் பார்வையும் அவரை நினைக்கும்போதே அவன் மனத்தில் வெறுப்புணர்ச்சி பீறிட்டுக் கொண்டு வந்தது.

அவன் மனத்தில் ஓர் எண்ணம் திடீரெனப் பளிச்சிட்டது. மேல் சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு விரைந்து வெளியே நடந்தான்.

அன்று மாலே.

இரண்டு போலீஸ்காரர்கள் குமாரின் வீட்டு வாசலில் வந்து நின்று, "சார்" என்று குரல் கொடுத்தார்கள்.

குமார் வெளியே வந்தான்.

"இன்ஸ்பெக்டர் நல்லதம்பி இருக்கிறாரா?" என்று கேட்டார் போலீஸ்காரர்களில் ஒருவர்.

"இருக்கிறார்..... இதோ கூப்பிடுகிறேன்....." என்ற குமார், ஹாலில் வந்து நின்று கொண்டு மாடியைப் பார்த்து, "இன்ஸ்பெக்டர் மாமா, உங்களைத் தேடிக்கிட்டு இரண்டு போலீஸ்காரர்கள் வந்திருக்கிறார்கள்" என்று உரக்கக் கூவினான்.

"என்னேயா?" என்று வியப்போடு கேட்ட நல்லதம்பி விரைந்து கீழே இறங்கி வந்தார்.

அவரைப் பார்த்த இரண்டு போலீஸ்காரர்களும் மரியாதையுடன் விரைப்பாக ஸல்யூட் அடித்தனர். பின், "சார், சேலத்திலிருந்து உங்களுக்கு ஒரு ஃபோன் கால் வந்திருக்கிறது. சேலம் டி. எஸ். பி. உங்களோடு பேச வேண்டுமாம். அவசரக் காலாம்..." என்றனர்.

"என்னிடமா?" என்று தடுமாற்றத்துடன் கேட்டார் நல்லதம்பி.



''ஆமாம், சார்.... இன்ஸ்பெக்டர் நல்லதம்பி நீங்கள்தானே....?''

''ஆமாம்.... நான்தான்.... இல்லை.. இல்லையில்லை.... அது என் தம்பியின் பெயர்.... என் பெயர்.... நல்லமுத்து'' என்று தொடர்பு ஏதுமின்றித் தடுமாற்றத்துடன் பேசினார் நல்லதம்பி.

அப்போது.....

அதுவரை மறைவிலிருந்த அந்த ஊர் போலீஸ் இன்ஸ்பெக்டர் கையில் விலங்குடன் வெளியே வந்தார்.

'' என்ன மிஸ்டர்.... ஏனிப்படி உளறிக் கொட்டுகிறீர்கள்? வேடம் கலைந்து விட்டதே என்ற பயமா ? தாமோதரன் வீட்டில் கொள்ளையடிக்கப் போட்டிருந்த பெரிய திட்டம் தவிடு பொடியாகிவிட்டதே என்ற கலக்கமா ?''

'' நான் ஏன் வேடம் போடுகிறேன்? நான்தான் இன்ஸ்பெக்டர் நல்லதம்பி.....'' என்றார் அந்த ஆள் சமாளிக்கும் குரலில்.

'' ஸாரி மிஸ்டர்....! ஒரே பெயரில் வேண்டுமானால் இருவர் இருக்கலாம். ஆனால் நல்லதம்பி என்ற பெயரில் இருவர் ஒரே ஊரில் இன்ஸ்பெக்டராக இருப்பதும் இருவரும் தாமோதரனுக்கு நண்பராக இருப்பதும் நடக்கக் கூடிய காரியம் அல்லவே?''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டார் அதுவரை நல்லதம்பியாக நடித்தவர்.

''உண்மையான நல்லதம்பியான என்னிடமே என் பெயரைக் கூறி நீ நடிக்க முயற்சி செய்வதை நினைத்தால் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது.'' என்றார் உண்மையான இன்ஸ்பெக்டர் நல்லதம்பி.

இதைக் கேட்டுக் கொண்டே வந்த குமாரின் அம்மா, ''அடப்பாவி, உன் நடிப்பை நான் அப்படியே நம்பி விட்டேனே !'' என்றாள்.

இன்ஸ்பெக்டர் பேசினார்: ''ஆனால் குமார் மட்டும் இவனை நம்பவில்லை. என் புகைப்படத்தைத் தாமோதரனின் புகைப்பட ஆல்பத்தில் குமார் பார்த்திருக்கிறான். இவன் என் பெயரைக் கூறிக்கொண்டு வந்ததும் அவன் சந்தேகப்பட்டதற்கு அதுதான் முதல் காரணம். பின் இவன் பாத்ரூம் பக்கம் போனபோது யாரும் அறியாமல் இவனது சூட்கேஸைத் திறந்து பார்த்திருக்கிறான். உள்ளே கள்ள சாவிக்கொத்து, கத்தி, கொறடு, ஸ்குரூடிரைவர் யாவும் இருக்கவே குமாரின் சந்தேகம் வலுவடைந்து விட்டது. போனில் போய் உண்மையைக் கூறிவிடலாம் என்றெண்ணி ஸ்டேஷனுக்கு வந்தான்.

'' இந்தத் திருட்டுப் பயலின் போதாத காலமோ என்னவோ நேற்றுத்தான் சேலத்திலிருந்து மாற்றலாகி நான் இந்த ஊருக்கு வந்தேன். என்னிடம் குமார் அனைத்தையும் கூறவே நாங்கள் இப்படி ஒரு திட்டம் தீட்டினோம். சரியான நேரத்தில் குமாரின் சமயோசித புத்தியால் ஒரு பெரிய திருட்டைத் தவிர்க்க முடிந்தது. என்று விளக்கம் கொடுத்த இன்ஸ்பெக்டர் ''தாமோதரன் ஊரிலிருந்து வந்ததும் நானே அவனை வந்து பார்க்கிறேன்'' என்று குமாரின் அம்மாவிடம் கூறி விடை பெற்றார். ○





★ ஆபீஸுக்குப் புறப்படும் அப்பாவிடம் 'என்னையும் கூட்டிண்டு போ!' என்று அடம் பிடிக்கும் குழந்தைகளையும் ' வரும்போது எனக்கு என்ன வாங்கிண்டு வருவே?' என்று நச்சரிக்கும் குழந்தைகளையும் பார்த்திருக்கிறோம். ஆகாசவெளியில் சுற்றப் போன அப்பாவுக்கு அன்பு முத்தம் கொடுக்கும் இந்தச் சிறுவன் ரஷ்யாவின் விண்வெளி வீரர் 'பீட்டர் க்ளிமுக்'கின் மகன்தான். அது சரி, திரும்பி வரும்போது என்ன வாங்கி வரும்படி அப்பாவிடம் கேட்டிருப்பான்! — **தி பிரஸ் இண்டியா.**

★ மனிதர்களிடம் உள்ள குறை — நிறைகளைப் பறவை, மிருகங்கள் மூலம் உருவகப்படுத்திக் குழந்தைகளோடு பெரியவர்களையும் ரசித்துச் சிரித்துச் சிந்திக்கவும் வைத்த மேதை வால்ட் டிஸ்னி. அமெரிக்காவின் இருநூற்றாண்டு விழாவை இம்மாதம் முதல் ஓராண்டு அங்கே கொண்டாடப் போகிறார்கள். அப்போது டிஸ்னி உலகில் அந்த மேதையின் படைப்புக்களே விழா ஊர்வலத்தை தினமும் முன்னின்று நடத்தப் போகின்றன. — **யு. எஸ். ஐ. எஸ்.**

நந்து சுந்து மந்து ⑬

கதை: வாண்டு மாமா
சித்திரம்: செல்லம்




வேறு... வேறு... வேறு! அப்படி வா... ஆனால் உன் பாய்ச்சல் எங்கிட்டே பலிக்காது, தெரிஞ்சுக்கோ...
யம்மாடி...! மாத்தை முட்டியே, என்னை விழ வச்சுட்டுதே... ஆபத்தான்னு போயிடும் போலிருக்கு.
யப்பாடியோவ்! ஒரே தொர்ந்து... நல்ல வேளை கொம்பில மாட்டிக்கல்லே... ஆறு இருந்ததோ பிழைச்சேன்...
ஆற்றிலிருந்து கரையேறிக் கூடாரத்துக்குப் போன மந்துவுக்கு சரியான பட்டாணித் தாக்குதல் கிடைக்கிறது!
ஐயோ!... போச்சு, போச்சு! என் தலை, முதுகு, மூக்கு.... அதாவில ஊதித் தாக்கு இத்தனை வலியா வலிக்கும்? தெரியாமப் போச்சே!
ஏதோ விளையாட்டுப் பயல்னு இடங்கொடுத்தா ரொம்ப எல்லை மீறிப் போயிட்டான். இனிமே என்ன செய்வான் பார்க்கலாம்....
அது போல வேற நாணல் குழாய் கிடைக்காதோ? என்னை என்னமா விரட்டி விரட்டிச் சுள்ளி கொடுத்தே!
வா... வா! பலே... பலே. மந்துப் பயல் மண்டுப் பயலில்லே



புதிய காலை அழகாக மலர்ந்து வந்தது. இளங் கதிரவனின் ஒளி பரவ ஆரம்பித்தது. புள்ளினங்கள் சுறுசுறுப்புடன் விரைந்தன. காலைப் பத்திரிகையுடன் வெளியே வந்த நான், அங்கு நாணு நிற்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தேன்.

''சார்...! உங்களிடம்...'' வார்த்தையை முடிக்க முடியாமல் தயங்கினான்.

''என்ன வேண்டும் நாணு?''

''பாமினிக்கு இரண்டு நாட்களாக உடல் நலமில்லை சார். தேர்வு சமயத்தில் என்னால் ஒன்றும் செய்ய முடியாமல் போய் விட்டது. நேற்று மிகவும் மோசமாய்ப் போய், என்ன ஆகிவிடுமோ என்று...'' இமை விளிம்பில் நீர் முட்டி நின்றது அவனுக்கு. நெஞ்சில் நெகிழ்ச்சியும், கண்களில் ஆசையுமாக அவன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஏன் என்னிடம் இதைப் பற்றி முன்பே சொல்லவில்லை? உனக்குத் தேர்விருந்தால் பாமினியைக் கவனிக்கக் கூடாதாக்கும்?'' என்றேன் கோபத்துடன். பிறகு அவனுக்குப் பணத்தைக் கொடுத்தேன்.

''உன் அம்மாவிடம் பாமினியைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளச் சொல். தேர்வுக்கு எப்படிப் படித்திருக்கிறாய்?''

''நன்றாகப் படிக்கவில்லை சார்! பாமினிக்கு உடல்நிலை சரியில்லாத நிலையில் என்னால் படிக்க முடியவில்லை...''

''சரி சரி. இன்னும் நேரமிருக்கிறது. நன்றாகப் படி. படிப்பும் முக்கியமாயிற்றே!'' அவன் நன்றி சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

இதயம் எனக்குள் அவிழ்கிறது. மலர்கள் என் இதயத்தே பூக்கின்றன. பூப்போன்ற ஓர் அழகிய முகம், தோன்றிவிட்டு மறைந்தது. இன்பத்தில் கட்டிய கனவுக் கோபுரம் இடிந்து நொறுங்கியதைப் போல் எனக்குள் ஒரு பரபரப்பு. 'என் மகன்... என் மகன்... போய்விட்டான். போயே விட்டான்... இந்தியத் தாய்க்காகத் தன் உயிரைக் கொடுத்த தியாகி அவன். போரில் தன்னையே இழந்து விட்டவன். நாணு... என்னிடம் படிக்கும், நான் நேசிக்கும் பையன்....

''சார்....சார்...'' எண்ணக் குவியல்களின் இடையே இருந்த என்னை அந்தக் குரல் தடுத்து இழுத்தது. நாணுதான் என்னை அழைத்தான்.

''என்னப்பா, நாணு?''

''வைத்தியர் பாமினியைப் பார்த்து மருந்து கொடுத்தார். குணமாகிவிடும் என்று சொன்னார்.'' அவன் குரலிலிருந்த ஆர்வம், அன்பு இவையெல்லாம் புண்பட்ட என் உள்ளத்துக்கு மருந்திட்டாற் போலிருந்தது.

''பள்ளிக்கு நேரமாகிறது. மாலையில் வந்து பார்க்கிறேன் என்று அம்மாவிடம் சொல்.''

நாணுவுக்கு உதவி செய்வதில் நான் என்றுமே சளைத்ததில்லை, இறந்துபோன என் மகனின் ஞாபகத்தில். ஏழ்மையில் உழலும் சிறுவன் ஒருவனைக் காப்பாற்றும் பொறுப்பை நானே வலிய எடுத்துக் கொண்டேன். அவனை மட்டுமல்ல, அவன் தங்கை பாமினியையும் நான் தான் கவனித்துக் கொள்கிறேன். காட்டுப்பாடி அரசாங்க உயர்நிலைப் பள்ளியில் நாணு என்னிடம்தான் படிக்கிறான். ரொம்பப் புத்திசாலி இல்லை அவன். ஏதோ படிப்பான், சராசரி மாணவனைப் போல.

அந்த ஹாலில் இருந்த அத்தனை மாணவர்களும் தேர்வு எழுதிக்கொண்டிருந்தனர். ஆனால், நாணு மட்டும் ஒன்றும் எழுதாமல், எழுத முடியாமல் உட்கார்ந்திருந்தான். நானும் அவனைப் பார்த்தும் பார்க்காதது போல், மற்றவர்களைக் கண்காணித்துக் கொண்டிருந்தேன். நேரம் சென்று கொண்டிருந்தது. திடீரென்று இப்போது நாணுவும் எழுத ஆரம்பித்தான். மாலை வேளையில் பரவும் பூமணம் போல என்னுள் சந்தேகம் பரவியது. சட்டென்று அவன் எழுதிய தாள்களைப் பார்வையிட்டேன். அதனுள் பல சிறு தாள்கள். அவைகளிலிருந்து விடைகளைப் பார்த்து நாணு 'காப்பி' அடிக்கிறான். என் இதயத்தில் யாரோ பெரிய கல் ஒன்றை எறிந்தாற்

போன்ற கடும் வலி! என் உடல் சிலிர்த்தது. வெறுப்பும், சலிப்பும் என்னுள்ளத்தே படர்ந்தன.

''நாணு!'' அவன் முகம் வெளிறிட்டது. கையைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டான். சிலந்திப் பூச்சியாய்த் துடிக்கும் இதழ்கள். கண்கள் மருண்டன.

''போடா, வெளியே போ. 'காப்பி' அடித்து 'பாஸ்' பண்ண நினைக்கிறாயா? போ....''

மாலை இருள் கனக்கத் தொடங்கியது அங்கொன்றும் இங்கொன்றுமாக விளக்குகள் எரிய ஆரம்பித்தன. பள்ளியிலிருந்து கிளம்பி வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தேன். எண்ணங்கள் மனத்தினுள் சிறகு விரித்துப் பறந்தன. மனத்தில் இனம் புரியாத ஓர் ஏக்கம். 'நாணு பாவம். நான் செய்தது சரியா? என்னுடைய மகனாக இருந்தால் நான் அப்படிச் செய்திருப்பேனா? நேர்மை, நாணயம், சத்தியம் இவையெல்லாம் எப்போதும் இருக்க வேண்டும் என்ற ஓர் ஆவலில் அவனுடைய வாழ்க்கையைப் பாழாக்கி விட்டேனோ?' பாளை விரிசல் கண்டது போல, மனமும் இரு கூறுகப் பிளந்தது. சட்டென்று யாரோ என்னைப் பின்தொடர்ந்து வரும் ஓர் ஓசை. யாரென்று பார்க்கத் திரும்புகையில்—

ஓர் இரும்புக் குண்டு என் தலையில் விழுந்தது போன்ற வலி... யாரோ... யாரோ என்னைக் கண்மூடித்தனமாக அடிக்கிறார்கள். இருட்டின் மூலையில். எங்கோ ஒரு பாதாளத்தில் வீழ்கிறேன்.

காற்றில் பறக்கும் தாள்களைப்போல் நான்கைந்து நாட்கள் போய்விட்டன. தலையில் பெரிய கட்டுடன் மருத்துவமனையில் படுத்திருக்கிறேன். பள்ளி மாணவர்கள் எல்லோரும் என்னை இப்போதுதான் பார்த்துவிட்டுப் போனார்கள். நாணு—?

''சார்...!'' கிணற்றின் அடியிலிருந்து பேசுவது போல் குரல் கேட்டது. மெல்லத் திரும்பினேன்; நாணுதான் நின்று கொண்டிருந்தான்.

''பாமினிக்குக் குணமாகி விட்டதா? வந்து பார்க்க வேண்டும் என்றிருந்தேன். அதற்குள் இப்படி ஆகிவிட்டது...''

''சார்... சார்...'' என்று நாணு அரற்றினன். ஏதோ சொல்லத் தயங்குவது போல நின்றிருந்தான்.



''நீ....நீதானே என்னைத் தாக்கியது?'' என்னை மீறி வந்து விட்டது அந்தக் கேள்வி.

''சார்... நான்தான் சார்'' அவன் குரல் தழுதழுத்தது. ''என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டீர்கள் என்ற ஒரு வெறியில் அப்படிச் செய்து விட்டேன் சார்.''

''பரவாயில்லை நாணு. நேர்மையே தெய்வம் எனக் கருதும் எனக்கு இப்படிச் சோதனைகள் வருவது சகஜம். என் மகனைப் போல, இல்லை — என் மகனாகவே உன்னை வளர்த்து வருகிறேன். ஆனால் பாசம் வேறு, நேர்மை வேறு. நான் உனக்கு உதவி செய்கிறேன், உன்னிடத்தில் அன்புடன் பழகுகிறேன் என்று நினைத்து, என்னிடத்தில் நீ நாணயமற்ற உதவிகளை எதிர்பார்த்து ஏமாந்து விட்டாய். அது தவறு!

''நாணு! இருளில் நடந்து போகும் சிறுவன் நீ. நீமட்டும் இல்லை. பாமினி கூடத்தான். விளக்கின் வெளிச்சத்தைக் காட்டி, மேடு பள்ளங்களைப் பார்த்து விலக்கி, உங்களை வழி நடத்திச் செல்வது என் கடமை. நீ தேர்வில் காப்பியடித்தது தவறு. தவறு செய்வதிலிருந்து உன்னைத் தடுக்காதிருப்பது கோழைத்தனமாகும். உன்னைக் கெட்டதிலிருந்து மீட்கவே நான் இருக்கிறேன். நாணு.'' சோர்வினால் என் கண்கள் மூடிக்கொண்டன. ✲

வெறும் அளப்பு இல்லை!

மின்சாரத்தின் சக்தியை
அளக்க — அம்மீட்டர்
இருவகையான ஒலிகளின் வித்தியாசத்தை அளக்க — ஆடியோமீட்டர்
வெப்ப அளவைக்
கணக்கிட — கலோரிமீட்டர்
திரவங்களின் ஒப்பு அடர்த்தியைக்
கணக்கிட — ஹைட்ரோமீட்டர்
பாலின் ஒப்பு அடர்த்தியைக்
கணக்கிட — லாக்டோமீட்டர்
இரு காந்தங்களின் காந்த ஈர்ப்புச்
சக்தியை ஒப்பிட — மாக்னெடாமீட்டர்
காற்றின் அழுத்தத்தைக்
கணக்கிட — மானோமீட்டர்
மிகக் குறைந்த இடைவெளியை
அளக்க — மைக்ரோமீட்டர்
மிக உயர்ந்த வெப்ப நிலையை
அளக்க — பைரோமீட்டர்
உடலின் ரத்த அழுத்தத்தைக்
கணக்கிட — ஸ்பைக்மோமானோமீட்டர்
வாகனங்களின் ஓட்டத்தைக்
கணக்கிட — ஸ்பீடாமீட்டர்
கணிதத்தில் வருவது — பெரிமீட்டர்

கே. ஹரிஹரன் பி.எஸ்ஸி.

தெரியுமா?



1982. மேற்கு ஜெர்மனியின் உதவியுடன் ஒரு மாகாண அரசாங்கம் இரும்பாலை ஒன்றை பாரதத்தில் நிறுவியுள்ளது. எங்கு? ஊர்ப் பெயர் என்ன?

1983. கனடா எந்த ஆண்டு ஒரு டொமினியனாக அங்கீகரிக்கப்பட்டது?

1984. ஐ. நா. என்பது சர்வ தேச ஸ்தாபனங்களில் இரண்டாவது அமைப்புத்தான். அப்படியானால் முதல் ஸ்தாபனம் எது?

1985. இங்கிலாந்து நாட்டில் கிறிஸ்துமஸ் மரத்தை வைத்து அலங்கரிக்கும் பழக்கத்தை முதன்முதலில் புகுத்தியது யார்?

1986. சிந்தையைக் கிறங்க வைக்கும் வாசனைகளை (பர்ஃபியூம்)த் தயாரிப்பதற்கான மூலப் பொருளுக்கு ஆம்பர் கிரிஸ் *(Amber griss)* என்று பெயர். இது எங்கிருந்து கிடைக்கிறது தெரியுமா?

1987. கார்டோகிராபர் என்பவர் யார்?

1988. எதற்குக் காய்ந்த பனிக்கட்டி *(Dry Ice)* என்று பெயர்?

1989. க்ஷவரக் கத்தியைக் *(Safty Razor)* கண்டு பிடித்தது யார்?

1990. மிமாஸ், என்செலாடஸ், டிதிஸ், டியோனே, ரீ, டிடான், தெமிஸ், ஹைபீரியன், லெபடெஸ், ஃபோபே—இவைகள் எல்லாம் என்ன என்று சொல்ல முடியுமா?

1991. கணிதத்தில் டயாமீட்டர் (விட்டம்) என்பதின் விளக்கம் என்ன?

1992. கப்பல் படையில் 'ஆஸ்டிக்' *(ASDIC)* என்பதை எதற்காகப் பயன்படுத்துவார்கள்?

1993. புல்லுக்குப் பசுமை நிறத்தைக் கொடுப்பது எது?

1994. பொதுவாக இரத்தம் ஒன்பது பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை என்னென்ன?''

1995. *D. D. T.* என்ற மருந்தின் முழு விளக்கம் தெரியுமா?

1996. ஓர் அமெரிக்க ஜனாதிபதி 1901ம் ஆண்டு பஃபலோ என்னுமிடத்தில் சுத்திக் கொல்லப்பட்டார். அவர் பெயர் என்ன?

1997. ஏழாண்டுப் போரின்போது ஆஸ்திரியாவையும் பிரஷ்யாவையும் ஆண்டவர்கள் யார் தெரியுமா?

1998. ஹென்றி கிஸ்ஸிஞ்ஜர் — இந்தப் பெயர் அடிக்கடி பத்திரிகைகளில் அடிபடுகிறதே இவர் யார்?

1999. ரகசிய ஏஜண்ட் 007 என்ற புகழ்பெற்ற மர்மக் கதாநாயகனை உருவாக்கியவரின் பெயர் என்ன?

2000. ரேய்க்ஜவிக் என்பது எந்த நாட்டின் தலைநகர் தெரியுமா?

2001. அயர்லாந்தை வேல்ஸிலிருந்து பிரிக்கும் கால்வாயின் பெயர் என்ன?

2002. எந்த மலைத் தொடரிலிருந்து காவிரி நதி உற்பத்தியாகிறது?


தெரியுமே!

விடை: 1982. ஒரிஸ்ஸாவில் உள்ள ரூர்கேலாவில். 1983. ஆயிரத்தி எண்ணூற்றிஅறுபத்தேழாம் ஆண்டில். 1984. லீக் ஆஃப் நேஷன்ஸ் - 1920லிருந்து 1946வரை இயங்கிவந்தது. 1985. இளவரசர் ஆல்பர்ட் 1840ல் புகுத்தினார். 1986. ஸ்பெர்ம் வேல் - என்ற ஒருவகைத் திமிங்கிலத்தின் கொழுப்பிலிருந்து. 1987. தேசப் படங்களை உருவாக்குபவர். 1988. கரியமில வாயுக் கட்டிக்கு (Solid Carbon-di-oxide) 1989 கிங் காம்ப் கில்லட் என்ற அமெரிக்கர். 1990. கோகுலத்தில் கிரகங்களின் கதை என்ற தொடரைப் படித்தது நினைவிருந்தால் இதற்குப் பதில் கூறிவிடலாம். சனிக் கிரகத்தின் சாடிலைட்டுகள் (சந்திரன்கள்) இவை. 1991. ஒரு வட்டத்தின் சுற்றளவில் உள்ள இரு புள்ளிகளை நடுப் புள்ளி வழியாக இணைக்கும் நேர் கோட்டுக்கு விட்டம் என்று பெயர். 1992. நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டுபிடிக்க. 1993. க்ளோரோஃபில் என்ற பொருள். 1994. A,B,O - M,N - P - ரீஸஸ் (Rhesus) - லூதரன் (Lutheran) - கெல் (Kell)- லூயிஸ் (Lewis) - டஃப்ஃபி (Duffy) - கிட் (Kidd). 1995. டிக்ளோரோ - டிஃபினில் டிரை க்ளோரோ ஈதேன் என்பதாகும். (Dichloro - Diphenyl - Trichloro Ethane). 1996. வில்லியம் மெக்கின்லி. 1997. பிரஷ்யாவைப் பிரடெரிக் தி கிரேட்டும் ஆஸ்திரியாவை மரியா தெரஸாவும் ஆண்டனர். 1998. அமெரிக்க ஜனாதிபதிக்கு ஆலோசகராக இருப்பவர். சமாதானத் தூதுவராகப் பல தேசங்களுக்குப் பறந்து கொண்டிருக்கிறார். 1999. இயான் ப்ளெமிங் என்ற எழுத்தாளர். 2000 ஐஸ்லாந்தினுடைய தலைநகர். 2001. செயின்ட் ஜார்ஜ் கால்வாய். 2002.மேற்குத் தொடர்ச்சி மலைகளிலிருந்து.

ராட்சத மிருகங்கள்-13

மனிதன் தோன்றினான்


கிருஷ்ணவேணி




குதிரையின் பரிணாம வளர்ச்சியைப் போலவே யானையின் கதையும் சுவையானது. ஐம்பது மிலியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த யானையின் மூதாதையரைப் பார்த்தோமானால், 'இதுவா இவ்வளவு பெரிய ஜந்துவாக உருமாற்றம் பெற்றது?' என்று நம்பிக்கை கொள்ளாமல் திகைப்போம். யானையின் ஆதித் தோற்றம் சாதாரணப் பன்றியைப்போல, 'டாபிர்' எனப்படும் ஒரு வகை மிருகத்தைப் போலிருந்தது. ஆதி யானையைப் பார்த்தவர் யாரும் இல்லை. இந்த விநோதமான ஆதி யானையின் பெயர் மோரிதேரியம் *(Moeritherium)* எகிப்தில் இருந்த புராதன ஏரியான மோரிஸ் என்பதிலிருந்து இப்பெயரிட்டிருக்கிறார்கள்.

மோரிதேரியம் கட்டை குட்டையான உருவ அமைப்புக் கொண்டது. கனமான கால்களையும் குட்டையான கழுத்தும் உடையது. மேல் தாடையிலிருந்து பக்கத்துக்கு ஒன்றாக இரு அதிகப்படியான பற்கள் சற்று நீண்டு வெளியே துருத்திக் கொண்டிருந்தன. இன்றைய யானையின் தந்தங்களாக இந்தப் பற்கள்தாம் பரிணாமம் பெற்றன. மோரிதேரியத்துக்கு இந்தப் பற்கள் பல வகைகளில் பலனுடையவைகளாக இருந்தன. தாவர உணவைக் கூட்டிக் குவித்து வாய்க்குள் திணித்துக் கொள்ள இக்கோரைப் பற்கள் உதவின.

மோரிதேரிய சந்ததிகளின் தலை முறைக்குத் தலை முறை அவை உயரமாக வளரலாயின. அவற்றின் உயரம் அதிகமானதைப் போலவே உருவ அமைப்பிலும் மாறுதல்கள் ஏற்பட்டன. மரங்களிலிருந்து தாவர உணவைப் பற்றி இழுத்து உண்பதிலிருந்து பூமியிலிருந்தே அவற்றை எடுத்துக் கொள்ளும்படி இவற்றின் கழுத்து நீண்டது. ஆனால் ரொம்பவும் நீளமாகிவிடவில்லை. தேவையான நீளமும் மாற்றமும் அதன் முகத்திலேதான் ஏற்பட்டன. இரு தாடைகளும் நீளமாக வளர்ந்தன. மேல் தாடையிலிருந்து நீண்டிருந்த தந்தம் இன்னும் நீளமாகியது. மூக்கும் மேலுதடும்கூட நீளமாயின. இந்த நிலையில் இன்றைய யானையின் துதிக்கை உருப்பு உருவாக ஆரம்பித்தது.





மோரிதேரியத்தின் வழித் தோன்றல்கள் இப்படியே இன்னும் உயரமாக வளர்ந்து கொண்டு வந்தன. திடீரென்று, விநோதமாக, இவற்றின் கழுத்து மறுபடியும் சுருங்கிக் குட்டையானது. இதற்கு நேர்மாறாக இவற்றின் தந்தங்கள், மேலுதடு, மூக்கு ஆகியன மிக மிக நீளமாக வளரலாயின. உயரமான கால்களுக்கு இணையாக இருந்தன இவற்றின் வளர்ச்சி.

ஆதி யானைகள் மேலும் வளர்ந்தன. விநோதமானதும் வித்தியாசமானதுமான இன்னொரு மாற்றம் தோன்றியது அவைகளிடம். கழுத்து குட்டையாக இறுகியதைப் போலவே கீழுதடும் சுருங்கி மிகவும் குட்டையாகியது. கீழ் நோக்கி நீண்டு வளர்ந்த தந்தங்கள் மேல் நோக்கி வளைந்து வளரலாயின. மேலுதடும் மூக்கும் கீழ் உதட்டின் மீது படியாமல் அதன் தாங்குதல் தேவையில்லாமல் தனியாகத் தொங்கின. யானையின் உண்மையான துதிக்கை இப்போதுதான் தோன்றியது. இந்த உருவத்திலிருந்த ஆதி யானைகளை ஆராய்ச்சியாளர் மாஸ்டோடன் (*Mastodom*) என்று அழைக்கிறார்கள். மாஸ்டோடனின் துதிக்கை அதற்கு மிக மிக உதவியாக இருந்தது. மரங்களின் கிளைகளிலிருந்தும் பூமியிலிருந்தும் உணவைச் சேகரிக்க வசதியாக இருந்தது இந்தத் துதிக்கை அமைப்பு. இந்த அமைப்பு யானைகளின் வாழ்வுக்கு வசதியாக இருந்ததினால் இதன் பிறகு இதன் தோற்றத்தில் அதிகமான மாற்றங்கள் ஏற்படவில்லை.

இன்றைக்கு ஒன்றிலிருந்து இரண்டு மிலியன் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தை 'ஐஸ் ஏஜ்' (*Ice age*) என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். வட துருவத்தை அடுத்திருந்த பகுதிகள் ஏராளமான பனிப் பாறைகளால் மூடப்பட்டிருந்த காலம் அது. வட அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியாவின் வடக்குப் பகுதி இங்கெல்லாம் பனிக் கட்டிகள் உரைந்து மூடி இருந்தன. இந்தக் காலத்தில் யானைகள் மந்தை மந்தையாக பரவிக் கிடந்தன. இவற்றில் வட அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் வாழ்ந்த யானைகளில் இரு வகை முக்கியமானது. ஒன்று மேலே கூறிய மாஸ்டோடன். இதன் உடல் முழுதும் சடை சடையாக ரோமம் அடர்ந்திருந்தது. கடுமையான குளிரிலிருந்து பாதுகாத்துக் கொள்ள இந்த



முரட்டு ரோமம் உதவியது. இன்றைய யானைகளின் தந்தங்களைவிட மாஸ்டோடனின் தந்தங்கள் நீளமானவை.

இந்தப் பிராந்தியங்களில் வாழ்ந்த இன்னொரு வகை யானைக்கு மாமத் (Mammoth) என்று பெயர். ஐஸ் ஏஜில் மாமத்கள் மந்தை மந்தையாக உலகில் உலவி வந்தன. குளிரிலிருந்து காப்பாற்றிக் கொள்ள மாமத்தின் உடலிலும் ஏராளமான முரட்டு ரோமம் அடர்ந்திருந்தது.

இந்தக் கால கட்டத்தில்தான் மனிதனின் தோற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும். மனிதன் தோன்றிய காலத்தை இன்னும் ஆராய்ச்சியாளர்களால் வரையறுக்க முடியவில்லை. 'ஐஸ் ஏஜ்' என்ற கால கட்டத்தின் கடைசிக் காலத்தில் மனிதர்கள் வாழ்ந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. ஆதி மனிதன் குகைகளில் வசித்திருக்கிறான். குகைவாசிகளாக வாழ்ந்த மனிதனுக்கு மாமத்களைப் பற்றித் தெரிந்திருக்கிறது. சில புராதன மலைக் குகைகளில் இந்த ஆதி மனிதர்கள் மாமத்களின் உருவங்களைக் குகைச் சுவர்களில் கற்களைக் கொண்டு கீறி வரைந்திருக்கிறார்கள்.

குகையில் வாழ்ந்த கற்கால மனிதர்களுக்கு மாமத் உதவியாக இருந்திருக்கிறது. என்ன உதவி? அவர்களின் உணவாக மாமத் பயன்பட்டிருக்கிறது. மாமத் என்ற ராட்சத யானைகளை வேட்டையாடிப் பசியாறி இருக்கிறான் ஆதி மனிதன். மாமத் வேட்டையின் வெற்றியையே அப்படிக் குகைச் சுவர்களில் அதன் உருவத்தைச் செதுக்கிக் கொண்டாடி இருக்க வேண்டும்.

அந்தக் கால கட்டத்தில் வாழ்ந்த வேறு பல காட்டு விலங்குகளும் மனிதனின் தோழனாக இருந்திருக்கின்றன. மாமத்தைத் தவிர வேறு பல பிராணிகளும் மனிதனுக்கு உணவாகி இருக்கின்றன. அவற்றில் கலைமான், காட்டு எருமைகள், காட்டு ஆடுகள் ஆகியவை மனிதன் குகைவாசியாக வாழ்ந்த காலத்திலிருந்த எல்லா மிருகங்களுமே அவனுக்கு உபயோகமாக இருந்தன என்று சொல்ல முடியாது. சில மிருகங்கள் மனிதனின் விரோதிகளாகவும் இருந்தன. குகை மனிதனின் விரோதியாக இருந்ததில் முக்கியமானவை கரடிகள். மாரிக் காலங்களில் கடுங் குளிரிலிருந்து தற்காத்துக் கொள்ள மனிதன் குகைகளை நாடி ஓடிப் போய்ப் பதுங்கினான். அதே குகையில் இதே காரணத்துக்காகத் தங்கி இருந்தன கரடிகள். இருவருக்குமிடையே பல தடவைகள் பலமான போர் நிகழ்ந்திருக்கிறது. தாக்கப்படும் போது குகை வாழ் கரடிகள் மிக மிகப் பயங்கரமானவை. கரடிகளுக்கும் மனிதர்களுக்கும் நிகழ்ந்த போரில் மனிதன் வெற்றி பெற்றால் அவனுக்கு உண்ணுவதற்குக் கரடி இரைச்சியோடு உடுப்பதற்கோ, போர்த்திக் கொள்ளவோ கதகதப்பான கரடித் தோலும் கிடைத்தது. குகைகளில் வாழ்ந்த ஆதிமனிதன் உணவுக்கும் உடைக்கும் காட்டு விலங்குகளையே நம்பி இருந்தான்.

மாஸ்டோடன், மாமத் ஆகியவைகளும் மற்றும் அந்தக் கால கட்டத்தில் வாழ்ந்த ராட்சத மம்மல்களும் எப்படி அழிந்தன? பனிக் கட்டிகளால் மூடப்படாத உலகின் பகுதிகளில் எரிமலைகள் வெடித்துத் தீக்குழம்புகளைக் கக்கிக் கொண்டிருந்தன. இன்னும் பல பகுதிகளில் பூமியின் அடியிலிருந்து — ஏராளமான 'தார்' வெளிப்பட்டுப் பெரும் குட்டைகளாகத் தேங்கிக் கிடந்தது. மழை நீர் இந்தக் குட்டைகளில் தாரின் மேலாகத் தேங்கி நின்றன. மாமத், குதிரை, ஒட்டகம் போன்ற மிருகங்கள் நீர் அருந்த இத்தகைய குட்டைகளை நாடிப் போயின. குட்டையில் இறங்கியதும் கெட்டியான தாரில் சிக்கிக்கொண்டு வெளியேற முடியாமல் பிராணவஸ்தையில் கூச்சலிட்டன. இவைகளின் கூச்சல் வளைந்த கோரைப் பற்களை உடைய புலிகளை (Saber Toothed Tiger) அழைத்தது. இந்தப் புலிகள் மிகவும் கொடியவை. இவற்றின் மேல்தாடையிலிருந்து கீழ் நோக்கி வளைந்திருந்த இரு நீண்ட பற்களாலே இவற்றுக்கு இந்தப் பெயர். இந்தப் பற்களினால் இப்புலி மற்ற மிருகங்களைச் சுலபமாகக் கொன்று, அவற்றின் எலும்புகளிலிருந்து மாமிசத்தைக் குதறி உதறி எடுத்து உண்ணும். இதே புலியும் தார்க் குட்டைகளில் சிக்கி மடிவதும் உண்டு. தார்க் குட்டைகளில் சிக்கிய மிருகங்களை மாமிசம் உண்ணும் கழுகுகளும் மற்றப் பறவைகளும் அவற்றின் நிர்க்கதியான நிலையைப் பயன்படுத்தி இறையாகக் கொண்டன.

நாம் இப்போது வாழ்ந்து கொண்டிருப்பது ஸெனோஸாய்க் எரா (Cenozoic Era)வில் - மம்மல்களின் சகாப்தத்தில். நாமும் ஒரு மம்மல் — பாலூட்டி தானே? மனிதனின் தோற்றமும் அவனது நாகரிக வளர்ச்சியும் தனியானதொரு வரலாறு. (முற்றும்)

சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. [illegible]நாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்

REGISTERED NO. M. 9040 GOKULAM, Children's Fortnightly



